
ஜனவரி 2003 www.padippakam.com ரூ 5.00

# புதிய ஜனநாயகம்



குஜராத்:
பார்ப்பன
பயங்கரவாதத்தின்
வெற்றி



www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## தமிழகப் போலீசின் மேல்சாதித் திமிர்

திருநெல்வேலி நகரிலுள்ள ஊருதாயார் குடியிருப்பைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர், மேல்சாதி வெறியர்களின் ஆதிக்கத்தைத் தீவிரமாக எதிர்த்து வருவதன் காரணமாக, அந்நகர போலீசார் அவர்கள் மீது சட்ட விரோத அடக்குமுறைகளைத் தொடர்ச்சியாக ஏவிவிட்டு வருகின்றனர். நவம்பர் 2-ஆம் தேதி நள்ளிரவில் குடியிருப்புக்குள் புகுந்த போலீசார், மூன்று தாழ்த்தப்பட்ட இளைஞர்களைக் கடத்திக் கொண்டு போய், சட்ட விரோதக் காவலில் அடைத்து வைத்தனர். இதன் பின் ஜெயராமன் என்ற இளைஞர் மீது பொய்யான திருட்டுக் குற்றத்தைச் சுமத்தி, அவரைச் சட்ட விரோதக் காவலில் அடைத்து வைத்து, பலவாறு மிரட்டினர். ''இக்குடியிருப்பைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் சமூக விரோதிகளுக்கு அடைக்கலம் கொடுப்பதால்தான், அப்பகுதியில் அடிக்கடி தேடுதல் வேட்டை நடத்துகிறோம்; இளைஞர்களைப் பிடித்துப் போய் விசாரிக்கிறோம்'' எனத் தனது மேல்சாதி வெறியை நியாயப்படுத்தி வருகிறது, திருநெல்வேலி நகரப் போலீசு.

## வீரப்பன் வேட்டைக்குப் பலியாவது யார்?

நாகப்பாவின் படுகொலைக்குப் பின் வீரப்பனைத் தீவிரமாகத் 'தேட'த் தொடங்கியிருக்கும் தமிழக அதிரடிப் படை, காட்டுப் பகுதியை ஒட்டி ஓடும் காவிரி ஆற்றில் பரிசல் ஓட்டுவதற்குப் பல கட்டுப்பாடுகளை விதித்து, பரிசல் ஓட்டத்தை ஏறக்குறைய தடை செய்து விட்டது. வீரப்பனின் சொந்த ஊரான கோபிநத்தத்துக்கு அருகில் உள்ள ஆத்தூர் கிராமம், இத்தடையுத்தரவால், போக்குவரத்துக்கு வேறு வழியின்றி தனித் தீவாகி விட்டது. ஆத்தூர், கோபிநத்தம், கொங்கார்பட்டியைச் சேர்ந்த மீனவர்களும், பரிசல் ஓட்டிகளும் பிழைக்க வேறு வழியின்றி, வீட்டிற்குள் முடங்கிக் கிடக்கின்றனர்; விவசாயிகளும் கூடச் சந்தைக்குப் போக வழியின்றி தட்டுத் தடுமாறுகின்றனர். வீரப்பன் வேட்டை என்ற பெயரில், பல கோடி ரூபாயைத் தின்று தீர்க்கும் அதிரடிப்படை, போதாக்குறைக்கு அப்பாவி மக்களின் பிழைப்பிலும் மண்ணை அள்ளிப் போடுகிறது.

## உலக வங்கி உத்தரவின் கொடூர விளைவுகள்

ஆந்திர மாநிலத்தில் கடந்த ஆண்டில் மட்டும் 196 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனார்கள். இந்த ஆண்டில் (2002) டிசம்பர் 5-ஆம் தேதி வரை தற்கொலை செய்து கொண்டு இறந்து போன விவசாயிகளின் எண்ணிக்கை 227-ஐத் தொட்டுவிட்டது. ஆந்திர முதல்வர் சந்திரபாபுவின் கணக்குப்படி, கடந்த ஐந்து ஆண்டுகளில் தற்கொலை செய்து கொண்ட ஆந்திர விவசாயிகளின் எண்ணிக்கை 1,000; பத்திரிகைகளின் கணக்குப்படி 2,000. உலக வங்கி உத்தரவுப்படி கொண்டு வரப்பட்ட மின் கட்டண உயர்வு, உரம் – பூச்சி மருந்து மானியம் வெட்டு, மற்றும் கந்துவட்டிச் சுரண்டல், விளைச்சலுக்குப் போதிய விலை கிடைக்காதது -- இவைதான் இத்தற்கொலைச் சாவுகளுக்குக் காரணமாகக் கூறப்படுகிறது. இறந்துபோன விவசாயிகளின் குடும்பங்களுக்கு போதிய நட்டஈடு தர மறுக்கும் சந்திரபாபு, மறுபுறம், விவசாயிகள் கூட்டுறவுக் கடனைக் கட்டத் தவறினால் ஜப்தி பண்ணுமாறு உத்தரவிட்டு, இத்தற்கொலைச் சாவுகளை மேலும் துரிதப்படுத்தி வருகிறார்.

## தில்லி போலீசின் அண்டப் புளுகு

''காசுமீர் டைம்ஸ்'' என்ற தினப் பத்திரிகையின் தில்லி நிருபர் இஃப்திகார் கிலானி மீது, ''இந்திய இராணுவ இரகசியங்களை பாகிஸ்தானுக்குக் கடத்தும் ஐ.எஸ்.ஐ. உளவாளி'' என முத்திரை குத்தி, அவரைச் சில மாதங்களுக்கு முன்பு தில்லி போலீசார் கைது செய்தனர். கிலானி, தன்னிடமிருந்து போலீசார் கைப்பற்றிய இராணுவத் தகவல்கள் அனைத்தும் அரசாங்க நூலகத்தில் கூடக் கிடைக்கும் என வாதிட்டார். நீதிமன்றம் இது பற்றி இராணுவத்திடம் கருத்துக் கேட்க, இராணுவ உளவுத்துறை, ''கிலானியிடமிருந்து கைப்பற்றப்பட்ட அறிக்கைகள் இராணுவ இரகசியம் அல்ல'' என தில்லி போலீசுக்கு அறிக்கை அனுப்பியது. ஆனால், போலீசோ இதை மூடிமறைத்துவிட்டு, கிலானியிடமிருந்து கைப்பற்றப்பட்டவை இராணுவ இரகசியங்கள்தான் என மைய அரசிடமிருந்து இட்டுக்கட்டப்பட்ட அறிக்கையை வாங்கி நீதிமன்றத்திடம் கொடுத்தது. இந்தத் தில்லுமுல்லும், கூட்டுக் களவாணித்தனமும் நீதிமன்றத்தில் அம்பலமாகிவிட, தில்லி போலீசு ஆப்பசைத்த குரங்காக விழி பிதுங்கி நிற்கிறது.

## இந்திய இராணுவத்தின் மாஃபியா வேலைகள்

அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள தெஹோர்குரியா கிராமத்தில், அக்கிராம மக்களுக்கும் இராணுவத்துக்கும் இடையே நடந்த மோதலில், ஏழு அப்பாவி கிராமத்தினரை இந்திய இராணுவம் சுட்டுக் கொன்றுவிட்டது. ''உல்பா'' தீவிரவாதிகளைத் தேடி அக்கிராமத்திற்கு வந்த இந்திய இராணுவம், தவறுதலாகக் கிராம மக்களைச் சுட்டுக் கொன்றுவிட்டதாக, இம்மோதலை இராணுவம் நியாயப்படுத்தியிருக்கிறது. ஆனால், நடந்த உண்மையோ வேறு. தெஹோர்குரியா கிராமத்தைச் சேர்ந்த அகமது என்பவரை மிரட்டி, அவரிடமிருந்து 50,000 ரூபாய் பறிக்கும் திட்டத்தோடுதான், ஒன்பது இராணுவத்தினர் சாதாரண உடையில் இக்கிராமத்தினுள் புகுந்தனர். அரசிடம் சரணடைந்துவிட்ட இரண்டு முன்னாள் ''உல்பா'' போராளிகளையும் இப்பணப்பறிப்பு வேட்டைக்கு இந்திய இராணுவம் பயன்படுத்தி இருக்கிறது. அப்பொழுது நடந்த மோதலில்தான் இரண்டு இராணுவத்தினரும், ஏழு கிராமத்தினரும் இறந்து போனார்கள். இப்படுகொலையை அடுத்து, இந்திய இராணுவம் சரணடைந்த போராளிகளைப் பயன்படுத்திக் கொண்டு, அசாமெங்கும் அப்பாவி மக்களை மிரட்டிப் பணம் பறித்து வருவதை அசாம் பத்திரிகைகள் நாறடித்து விட்டன.

இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்ட அப்பாவி கிராம மக்கள்





படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 18

**இதழ் 3**

சனவரி 2003

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அஞ்சல் பெட்டி எண். 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**


# குஜராத்: பார்ப்பன - பனியா பயங்கரவாதத்தின் வெற்றி

குஜராத் சட்டப்பேரவைத் தேர்தல்களில் பார்ப்பன — பனியா பயங்கரவாத பாசிசம் மீண்டும் ஆட்சியைப் பிடித்திருக்கிறது. பலவகையிலும் இது ஒரு அசாதாரணமான, அவமானகரமான வெற்றி. பாசிச இராணுவ ஆட்சியின் கீழ் தேர்தல் நடத்தி சர்வாதிகாரி முஷாரப் ஈட்டிய வெற்றியைவிட வெட்கக் கேடானது.

பொய்யான வாக்குறுதிகளை வாரி வழங்கி, அவதூறுப் பிரச்சாரங்கள் செய்து, பணத்தைக் கொட்டி இறைத்து, சாதி பலம் – ஆள் பலத்தை வைத்து, வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றி – கள்ளஓட்டுப் போட்டு, வன்முறை வெறியாட்டம் போட்டு தேர்தல் வெற்றிகளை ஈட்டுவதைப் பார்த்திருக்கிறோம். இதற்கு மாறாக, மாற்று மதத்தினருக்கு எதிரான வெறுப்பு, பயங்கரவாத பயம், பீதி, பாதுகாப்பின்மை, மதவெறி ஆகிய விஷத்தை விதைத்து, ஆட்சி அதிகாரத்தை அறுவடை செய்து கொண்டார்கள்.

ஆயிரக்கணக்கான இசுலாமிய அப்பாவி மக்களை நரபலி கொடுத்து, மதவெறிக்கு இரத்த அபிசேகம் கொடுத்து ஆட்சியைப் பிடித்திருக்கிறார்கள். இந்த வெற்றியை எப்படிச் சாதித்தார்கள், என்ன காரணங்கள் என்று ஒத்த கருத்துக் கூற முடியாமல் முரண்பட்ட விளக்கங்களை இந்து மதவெறியர்கள் கூறுகிறார்கள். வெளியே கூறமுடியாத வெட்கக்கேடான வழிமுறைகளை குஜராத் தேர்தல்களில் இந்துமத வெறியர்கள் கடைப்பிடித்திருக்கிறார்கள்.

குஜராத்தின் எல்லாத் தொகுதிகளிலும் நரேந்திர மோடியும், முஷாரப்பும் எதிரெதிராகப் போட்டியிடுவதைப் போன்ற தோற்றத்தை உருவாக்கினார்கள். ''பாரதீய ஜனதா வெற்றி பெற்றால்தான் அடுத்த தீபாவளியை இந்துக்கள் சுதந்திரமாகக் கொண்டாட முடியும்; பாரதீய ஜனதா தோல்வியுற்றால், காங்கிரசு ஆட்சிக்கு வந்தால், பாகிஸ்தானில் பட்டாசுகளைக் கொளுத்திப் போட்டு வெற்றி விழாக் கொண்டாடுவார்கள்'' என்று மோடி எல்லாத் தேர்தல் கூட்டங்களிலும் பேசினார்.

''காங்கிரசுக்கு ஓட்டுப் போடுபவர்கள், சர்வாதிகாரி முஷாரப்புக்கும், முசுலீம் பயங்கரவாதத்துக்கும் ஓட்டுப் போடும் தேசத் துரோகிகள். இந்திய தேசியத்தின் எதிரிகள்'' என்று பிரச்சாரம் செய்தார்கள். பிரச்சார சுவரொட்டிகள், தட்டிகள் எல்லாவற்றிலும் மோடியையும் முஷாரப்பையும் எதிர் எதிராக நிற்க வைத்தார்கள். கோத்ராவில் கொளுத்தப்பட்ட ரயில் பெட்டியின் மாதிரி பொம்மைகள், சுவாமி நாராயண் கோவிலில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல் வரைபடங்கள் பிரச்சாரக் கருவிகளாக பயன்படுத்தப்பட்டன.

இந்து மதவெறியர்களின் கோயாபல்சு பாணி பிரச்சாரப் புயலில் ஆயிரக்கணக்கான முசுலீம் அப்பாவிகள் அடித்தும் வெட்டியும் உயிரோடு கொளுத்தியும் கொல்லப்பட்ட உண்மைகள் நடந்த சுவடே தெரியாமல் மறைந்து போயின. இந்து – முசுலீம் என்று இருகூறாக குஜராத் சமுதாயமே இரு கிளைப்படுத்தப்பட்டது. இந்து மதவெறிப் பிரச்சாரப் புயலை எதிர்கொள்வதற்கான மாற்றுச் சக்தியே இல்லாத நிலை, வெற்றிடம் ஏற்படுத்தப்பட்டது. இந்து சமுதாயத்தினர் பல தொகுதிகளிலும் மதவெறி அலையால் அடித்துச் செல்லப்பட்டனர்.

ஆனாலும், இந்திய அரசியலில் இதுவொன்றும் புதிதல்ல, 1984 இந்திரா கொலையை அடுத்து, சீக்கிய மதத்தினருக்கு எதிரான காங்கிரசு கிரிமினல்களின் வெறியாட்டத்தைத் தொடர்ந்து வந்த தேர்தல்களில், நாடு முழுவதும் இத்தகைய அலை வீசியது. 1991 ராஜீவ் கொலைக்குப் பின்னும், 1999 கோவை குண்டுவெடிப்புக்குப் பின்னும் தமிழகத் தேர்தல்களில் இத்தகைய அலை வீசியிருக்கிறது. ஆனால், அப்போதெல்லாம், எதிர்த்தரப்பினர் ஒற்றை இலக்க நிலைக்கு வீழ்த்தப்பட்டனர். அந்த அளவுக்கு குஜராத் தேர்தல்களில் எதிர்த்தரப்பு படுதோல்வி அடைந்துவிடவில்லை என்பது அவர்களுக்கு ஆறுதலான விஷயம்.

2001 பிப்ரவரி கோத்ரா இரயில் எரிப்புச் சம்பவத்துக்கு பிறகு நடந்த பார்ப்பன – பனியா பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட குஜராத்தின் மத்திய – மாவட்டங்களில்தான் பாரதீய ஜனதா பெரிய வெற்றிகளை ஈட்ட முடிந்துள்ளது. மேற்கு, தெற்கு மாவட்டங்களில் கணிசமான அளவு அது தோல்வி கண்டுள்ளது. மோடி அரசின் ஒன்பது அமைச்சர்கள், குறிப்பாக பா.ஜ.க.வின் முன்னாள் முதல்வர் சபாநாயகர், துணை சபாநாயகர் ஆகியோர் படுதோல்வி கண்டுள்ளனர். இதிலிருந்து இந்து மத வெறி அலை என்பது மதவெறிப் படுகொலைகள் நடந்த பகுதிகளில் மட்டும் வெற்றி பெற்றிருக்கிறது; அங்கும் 51 சதவீத ஓட்டுகளை மட்டுமே பெற்றுள்ளது; எதிர்த்தரப்பிடம் 51 தொகுதிகளில் தோற்றுள்ளது.

ஆனால், குஜராத் வெற்றியால் இந்து மத வெறியர்கள் பெரும் குதியாட்டம் போடுகிறார்கள். இது ஒரு வரலாற்றுத் திருப்புமுனை என்று சாதிக்கிறார்கள். ஓரளவு இதில் உண்மை இருக்கிறது. 1999-இல் மத்தியில் வாஜ்பாய் அரசு அமைந்த பிறகு நடந்த இடைத்தேர்தல்களில் எதிலும் பா.ஜ.க. வெற்றிபெற முடியவில்லை. உ.பி, இராஜஸ்தான், மகாராஷ்டிரா, தில்லி, பஞ்சாபில் அக்கட்சியும் அதன் கூட்டாளிகளும் ஆட்சியுரிமையை இழந்துள்ளனர். குஜராத், இமாச்சல பிரதேசம் ஆகிய இரு மாநிலங்களில் மட்டும்தான் தேசியக் கட்சி எனக் கூறிக் கொள்ளும் பா.ஜ.க ஆட்சி நடந்தது. குஜராத்தில் கூட 2000 த்தில் நடந்த உள்ளூராட்சி, நகரவைத் தேர்தல்களிலும், சட்டப் பேரவைக்கான இடைத்தேர்தல்களிலும் படுதோல்வியைத்தான் சந்தித்தது.

இதனால், கடும் சரிவை எதிர்கொண்ட நிலையில் பல மாநிலத் தலைமைகளை மாற்றியதைப் போல, மதவெறியர் நரேந்திர மோடியை குஜராத்துக்குத் திருப்பி அனுப்பி முதல்வராக்கினர். அயோத்தி பிரச்சினையை மீண்டும் உயிர்ப்பித்து, அடுத்த தேர்தலைச் சந்திக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த இந்து மதவெறியர்களுக்குத் தக்க கருவியாக அமைந்தது கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம். அதைத் திறமையாகப் பயன்படுத்திக் கொண்டு தேர்தலில் விரைந்து வெற்றி பெற மோடி எத்தணித்தார். ஆனால், தேர்தல் ஆணையம் ஏற்படுத்திய தடைகளால் சற்று தாமதிக்க வேண்டியிருந்தது.

கோத்ரா சம்பவம் நடந்த 10 மாதங்களுக்கு பிறகும் முசுலீம் பயங்கரவாத பீதியை பரப்பி – நீடிக்கச் செய்தனர் மோடி அரசும், இந்து மதவெறியர்களும். அதற்கு சுவாமி நாராயணன் கோவில் மீதான பயங்கரவாதத் தாக்குதல் மேலும் உதவியது. உலகமயம் – தனியார்மயம் – தாராளமயம் ஆகியவற்றால் ஏற்படும் பொருளாதாரத் தேக்கம், மக்களின் துயரம் – அவலம் போன்றவை முக்கியப் பிரச்சினை அல்ல; எல்லை கடந்து வரும் முசுலீம் பயங்கரவாதத்தால் ஏற்படும் பாதுகாப்பு பற்றிய நிலைதான் முக்கியப் பிரச்சினை; பா.ஜ.க.வால் மட்டுமே பயங்கரவாதத்தை முறியடிக்க முடியும், நாட்டுக்கும் மக்களுக்கும் பாதுகாப்புத் தர முடியும் என்று பாசிச கோயாபல்சு பிரச்சாரம் செய்தனர்.

ஆனால், ''முசுலீம் பயங்கரவாதம், நாட்டுக்கும் மக்களுக்கும் பாதுகாப்பு'' என்பதற்குக்கூட, இந்து மதவெறி பயங்கரவாதத்தையும் அரசு பயங்கரவாதத்தையும்தான் அவர்களால் மாற்றாக முன்வைக்க முடிகிறது. இந்த போக்கு நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்குப் பதில் இரண்டுவகை மதவெறி பயங்கரவாதங்களை எங்கும் நிரந்தரமாக மாற்றுவதாகத்தான் முடியும். முக்கியமாக இந்து மதவெறி பயங்கரவாதம் முசுலீம் பயங்கரவாதத்துக்கு எதிரானது என்று கூறிக்கொண்டு, பிறகு முசுலீம் சமுதாயம் முழுவதற்கும் எதிரானதாகச் செயல்பட்டு, இறுதியில் பார்ப்பன – பனியா – சத்திரிய சாதிகளைத்தவிர, அனைத்து ''இந்து'' மக்களுக்கும் எதிரானதாகப் பாய்கிறது.

கோத்ரா இரயில் எரிப்பு சம்பவத்தை முசுலீம் மக்கள் போதிய அளவு கண்டிக்காததுதான் குஜராத் வெற்றிக்குக் காரணம்; வெறுப்புற்ற இந்துக்கள் அனைவரும் பா.ஜ.க.வை ஆதரிக்கின்றனர் என்று வாஜ்பாய் பேசியுள்ளார். ''குஜராத்தில் கடைப்பிடித்த இந்துத்துவா கொள்கையை நாடுமுழுவதும் பின்பற்றுவோம்'' என்று வெங்கையா நாயுடுவும் அத்வானியும் கூறுகின்றனர்.

இந்து மதவெறியர்களிலேயே, அமிலத்தை உமிழக்கூடிய விசுவ இந்து பரிசத்தின் பொதுச் செயலாளர் பிரவீன் தொகாடியா திமிரின் உச்சியில் நின்று கொண்டு வெறிக் கூச்சல் போடுகிறார்: ''குஜராத் பரிசோதனையை நாடு முழுவதும் மேற்கொள்வோம். ராஜஸ்தான், சட்டிஸ்கர், ம.பி., தேர்தல்கள் மூலமாக தில்லியிலும் இதையே சாதிப்போம். இன்னும் இரண்டு ஆண்டுகளில் நாடே இந்துவாகும். பாகிஸ்தானையும் கூறு போடுவோம்'' என்று கொக்கரிக்கிறார். ''இந்துத்துவாவை ஏற்காதவர்கள் தேசத் துரோகிகள்'' என்பதில் இருந்து ''இந்துத்துவாவின் எதிரிகளுக்கு மரணதண்டனை விதிப்போம்'' என்று பாசிச வெறிபிடித்தவனாகப் பேசுகிறார் தொகாடியா.



**வெற்றியைக் கொண்டாடும் முகமாக , அகமதாபாத்தில் முசுலீம்கள் வாழும் தரியாப்பூர் பகுதியில் இந்து வெறியர்கள் நடத்திய கலவரத்திற்குப் பின், துணை இராணுவத்தின் ரோந்து.**

தொகாடியா, மோடி போன்றவர்களின் வெறிக் கூச்சல்களுக்கு வாஜ்பாயும் அத்வானியும் கூட்டணிக் கட்சிகளுக்கு ஏற்றபடி வியாக்கியானங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இதைக் காட்டி, பா.ஜ.க இன்னமும் மதவாதக் கட்சி கூட இல்லை என்று நம்பச் சொல்லுகின்றனர், சந்திரபாபு நாயுடு, பெர்னான்டஸ், கருணாநிதி போன்றவர்கள். இந்து மதவெறியர்களை விட, இப்படிச் சமரசம் பேசுபவர்கள்தாம் மிகவும் ஆபத்தானவர்கள். இந்தியாவின் ஒட்டுமொத்த சமுதாயமும் புறக்கணிக்க வேண்டிய இந்து மதவெறியர்கள், இன்னமும் மற்ற பிற அரசியல் கட்சிகளைப் போன்றவர்கள்தாம் என்று உலாவி வருவதற்கு சமூக அடிப்படையை இவர்கள்தாம் ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

இந்து மதவெறியர்கள், பாசிச சக்திகள்தாம் என்று கறாராக, உறுதியாக வரையறுத்துப் போராடுவதற்குப் பதில், அப்படிச் செய்வது இந்து மக்களிடம் இருந்து தம்மைத் தனிமைப்படுத்திவிடும் என்று கருதி உண்மையில் ஒரு மிதவாத இந்துத்துவத்தையே காங்கிரசும் போலி கம்யூனிஸ்டுகளும் கடைப்பிடிக்கின்றனர். இத்தகைய சமரச சக்திகளை ஒதுக்கிவிட்டு, பாசிச இந்து மதவெறியர்களைக் களத்தில் ஆயுதபாணியாக எதிர்கொள்ளுவதுதான் மக்கள் முன் உள்ள சரியான ஒரே வழி. குஜராத் தேர்தல் முடிவுகளும் இதையே காட்டுகின்றன. ●

www.padippakam.com

# "மதமாற்றத் தடைச் சட்டத்துக்கு எதிராக அணிதிரள்வீர்!"

## — புரட்சிகர அமைப்புகளின் அறைகூவல்

குஜராத் மாநிலத்தைப் போலவே, நாடு முழுவதையும் இந்து மதவெறியர்களின் சோதனைக் களமாக மாற்றப் போவதாக பாரதிய ஜனதாவும், சங்கப் பரிவார அமைப்புகளும் வெளிப்படையாகவே பேசி வருகின்றன. தமிழகத்தில் அதற்கு அடித்தளம் அமைக்கும் விதமாகவே பாசிச ஜெயா அரசு மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

இந்தப் பார்ப்பன பயங்கரவாதத்தை எதிர்த்து முறியடிக்க, அனைத்து ஜனநாயகச் சக்திகளையும் அணிதிரட்டிப் போராட்டத்தை முன்னெடுக்க மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் – இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னனி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு வருகின்றன. அதன் ஓர் அங்கமாக, **"மதமாற்றத் தடைச் சட்டம் — பார்ப்பன பாசிசத்தைப் பாதுகாக்கவே!"** என்ற தலைப்பில் தமிழகமெங்கும் பரவலாகக் கருத்தரங்குகளும், அரங்கக் கூட்டங்களும், தெருமுனைக்கூட்டங்களும் நடத்தியுள்ளன. இதனையொட்டி சுவரொட்டி, துண்டறிக்கைகள், சுவரெழுத்துகள் மூலம் செய்யப்பட்ட பிரச்சாரம், அனைத்து தரப்பு மக்களிடமும் நம்பிக்கையை ஊட்டும் விதமாக அமைந்தது.

● தஞ்சையில் நவம்பர் 23 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் பு.மா.இ.மு. தோழர் பரமானந்தம் தலைமையேற்றார். மனித உரிமை பாதுகாப்பு கவுன்சிலின் வழக்குரைஞர் தோழர் பானுமதி சிறப்புரையாற்றினார். வேலைவாய்ப்பு அலுவலக தமிழ் மாநிலச் செயலர் தோழர் குருமூர்த்தி, விடுதலைச்சிறுத்தைகள் மாநிலத் துணைப் பொதுச் செயலர் தோழர் செழியன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

● சீர்காழியில் நவம்பர் 27-ஆம் தேதி அரங்கக்கூட்டம் தோழர் பானுமதி சிறப்புரையுடன் நடைபெற்றது. ஓய்வு பெற்ற நீதிபதி கோபாலகிருஷ்ணன், பு.மா.இ.மு. தோழர் ஸ்டாலின் உள்பட பலர் உரையாற்றினர்.

● திருத்துறைபூண்டியில் டிசம்பர் – 2 அன்று தோழர் கு. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் ம.க.இ.க. இணைச் செயலர் தோழர் காளியப்பன் மற்றும் தோழர் சிவக்குமார், தி.க. ஒன்றியச் செயலர் தோழர் சித்தார்த்தன், இ.பொ.க. ஒன்றியச் செயலர் தோழர் சந்திரராமன், த.தே.பொ.க. தோழர் இரா.கோவிந்தசாமி, புதிய தமிழகம் நகரச் செயலர் தமிழ்மணி ஆகியோர் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றினர்.

● திருச்சி இரயில்வே இன்ஸ்டியூட்டில் நவம்பர் 28-ஆம் தேதி அரங்கக் கூட்டம் தோழர் காளியப்பன் சிறப்புரையுடன் நடைபெற்றது. நிகழ்ச்சியில் ம.க.இ.க. கலைக் குழுவினரின் புரட்சிகரப் பாடல்கள் இந்து மதவெறிக்குச் சவால் விடும் விதமாக அமைந்தது.

● ஈரோட்டில் நவம்பர் 24 அன்று பு.மா.இ.மு. தோழர் புஷ்பராஜ் தலைமையேற்க நடைபெற்ற கருத்தரங்கில் தோழர் பானுமதி மற்றும் சி.பி.ஐ.யைச் சேர்ந்த வழக்குரைஞர் ப.பா.மோகன் ஆகியோர் உரையாற்றினர்.

● சங்கராபுரம் வி.வி.மு. சார்பில் டிசம்பர் 11 அன்று மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு தோழர் இராமு. தலைமையேற்க, தி.க., தி.மு.க., ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள், அம்பேத்கர் மக்கள் இயக்கம் முதலான பல்வேறு கட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர். பு.மா.இ.மு. தோழர் ஜெயகாந்த்சிங் சிறப்புரையாற்ற, திருவெண்ணெய் நல்லூர் வட்ட வி.வி.மு. கலைக் குழுவினர் புரட்சிகர கலை நிகழ்ச்சியை நடத்தினர்.

● சென்னையில் நவம்பர் 30-ஆம் தேதி அரங்கக் கூட்டம் தோழர் பானுமதி சிறப்புரையுடன் நடைபெற்றது. "பவுத்தமும், பழந்தமிழ்க் குடிமக்களும் "நூலாசிரியர் புலவர் ஜெ.ஆனந்தராஜன் கலந்து கொண்டு உரையாற்றினார். நிகழ்ச்சியில் இந்து மதவெறி, பாசிச ஜெயா அரசை அம்பலப்படுத்தும் ஓவியக் கண்காட்சியும், புரட்சிகரப் பாடல்களும் எழுச்சியூட்டுவதாக அமைந்தன. ●

ஈரோட்டில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் தோழர் பானுமதி.




### பேருந்து தனியார்மயம்: தஞ்சை பு.மா.இ.மு.வின் கண்டன ஆர்பாட்டம்

தனியார்மயமாக்கலை மற்ற மாநிலங்களை விட வேகமாகவும் வெளிப்படையாகவும் அமல்படுத்தி வருகிறது பாசிச ஜெயா அரசு. அதில் ஒரு பகுதிதான் அரசு பேருந்துகளைத் தனியாரிடம் தாரை வார்ப்பது. இதனைக் கண்டித்து தஞ்சை மாவட்ட புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி டிசம்பர் - 16-ஆம் தேதி இரயிலடி அருகே கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. மக்கள் கலை இலக்கியக் கழக மாநில இணைச்செயலர் தோழர் காளியப்பன். ஏ.ஐ.டி.யு.சி.யின் மாவட்டத் தலைவர் தோழர் மதிவாணன் ஆகியோர் உரையாற்றினர்.

'போக்குவரத்துத் துறையைத் தனியாருக்குக் கொடுப்பது உலக வங்கி உத்தரவால்தான் அமுல்படுத்தப்படுகிறது என்று தெரியாமல் இருந்தோம். கடந்த வருடம் நடந்த ஆர்ப்பாட்டத்தில் தோழர் காளியப்பன் பேசியதுதான் எங்களைச் சிந்திக்க வைத்தது' என்றார் மதிவாணன். இக்கண்டன ஆர்ப்பாட்டம் போக்குவரத்து ஊழியர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது.

— தகவல்:
பு.மா.இ.மு., தஞ்சை.

www.padippakam.com

## டிசம்பர்-6 பாதுகாப்பு கெடுபிடிகள்:

# அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்

இந்து மதவெறி கும்பலால் பாபர் மசூதி இடிக்கப்பட்ட தினமான டிசம்பர் - 6 நெருங்கினாலே, ஆளுங் கும்பல் அவிழ்த்துவிடும் ''தீவிரவாத - பயங்கரவாத பீதி'' பல மடங்கு எகிறி விடும். இந்த ஆண்டு, டிசம்பர்-6-ஐயொட்டி, தமிழகத்தில் மட்டும் 75,000 போலீசார் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். தமிழகமெங்கும் உள்ள பல முக்கிய கோவில்கள், தொடர்வண்டி மற்றும் பேருந்து நிலையங்கள், கூட்டம் அதிகமாக இருக்கும் அடுக்குமாடி வர்த்தகக் கட்டிடங்கள், அரசு அலுவலகங்கள் ஆகியவற்றுக்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பாதுகாப்பு என்ற பெயரில், போலீசார் பொதுமக்களை மோப்பம் பிடிக்கும் கண்காணிப்பு இந்த ஆண்டு நவம்பர் 30-க்கு முன்பே தொடங்கியது. ஆண்டவன் கூட எல்லா பக்தர்களையும் சோதித்தது கிடையாது; ஆனால், கோவிலுக்குப் போன எல்லா பக்தர்களையும் போலீசு சோதித்தது. சுருக்கமாகச் சொன்னால், போலீசு, ஆளுங்கும்பல் இவர்களைத் தவிர பெரும்பாலான தமிழக மக்கள் போலீசின் சந்தேகப் பார்வையின் கீழ் கொண்டு வரப்பட்டனர்.

இவ்வளவு போலீசாரைக் குவித்துவிட்டு, இவ்வளவு கண்காணிப்பு ஏற்பாடுகளைப் பண்ணிவிட்டு, ஒரு வெடிகுண்டைக் கூடக் கண்டுபிடிக்காவிட்டால், தமிழக போலீசின் மரியாதை என்னாவது? தமிழக போலீசின் 'திறமை'க்குக் குந்தகம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே சென்னை நகர போலீசு ஆணையாளர், டிசம்பர் 6-க்கு இரண்டு நாட்கள் முன்னதாக ஓர் அதிர்ச்சிக் குண்டைத் தூக்கிப் போட்டார்.

''தமிழகத்தில் கோவில்களைத் தகர்க்கவும், மத, அரசியல் தலைவர்களைத் தீர்த்துக் கட்டவும் பயங்கரவாதிகள் சதித் திட்டம் தீட்டியிருந்தது அம்பலமாகி, அது முறியடிக்கப்பட்டுள்ளது.''

''தஞ்சை - அதிராம்பட்டினத்தைச் சேர்ந்த தௌபிக், சென்னையைச் சேர்ந்த ஜாகீர் உசேன், தஞ்சை மாவட்டத்திலுள்ள மல்லிப்பட்டணத்தைச் சேர்ந்த ஹசரத் இமாம் அபிபுல்லா, நிஜாமுதீன், அப்துல் காதர்; காயல்பட்டினத்தைச்சேர்ந்த அமித் பக்ரி, மஹலரி ஆகியோர் இச்சதி தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மல்லிப்பட்டணத்தைச் சேர்ந்த தீவிரவாதிகளிடமிருந்து எட்டு கிலோ வெடி மருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், இத்தீவிரவாதிகளுக்கு சர்வ தேசத் தீவிரவாதிகளோடு தொடர்பிருப்பதாகவும்'' அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி கொடுக்கக் கூடிய கண்டுபிடிப்புகளை வெளியிட்டது, தமிழக போலீசு.

போலீசின் இந்தக் கண்டுபிடிப்புகளுக்கு ''தமிழகக் கோயில்களைத் தகர்க்கும் சதி முறியடிப்பு'', ''ஆபத்து, 'அம்மா'வுக்கு இல்லை... கோயிலுக்குத்தான்'' என்றெல்லாம் தலைப்பு கொடுத்து, செய்திகளை வெளியிட்டு, பத்திரிகைகளும் தம் பங்குக்கு பரபரப்பூட்டின. இதை வைத்துப் பார்க்கும் பொழுது, பிடிபட்ட இந்தத் தீவிரவாதிகள், தங்களின் ஒரு கையில் ஏ-கே 47 துப்பாக்கியோடும், இன்னொரு கையில் வெடிகுண்டோடும் பதுங்கி இருந்திருப்பார்களோ என நினைக்கத் தோன்றும். ஆனால் இத்தீவிரவாதிகளைப் பிடித்த பின்பு, இவர்களின் செயல்பாடு பற்றி போலீசு தரும் 'ஆதாரங்களே', இந்த பரபரப்பூட்டலுக்கு நேர் எதிரானதாக இருக்கிறது.

இத்தீவிரவாதிகளைப் பிடித்தபின்பு சென்னை நகர போலீசு ஆணையர் விஜயகுமார் அளித்த பேட்டியில், ''சென்னையில் கைது செய்யப்பட்டுள்ள ஜக்காரியா என்ற அபுயகியா மற்றும் தௌபிக் இருவரும் சவூதி அரேபியாவில் உள்ள தீவிரவாதி அபுஹம்சாவுடன் தொடர்பு கொண்டு, தமிழ்நாட்டில் முசுலீம் தற்காப்புப் படை தொடங்கி செயல்படுவது குறித்து ஆலோசனை செய்துள்ளனர்.

டிசம்பர் 6: தமிழகக் கோவில்களில் பக்தர்களுக்கு ஏற்பட்ட சோதனை!





படிப்பகம்

www.padippakam.com

''தௌபிக் வடசென்னை பகுதியில் தங்கி, அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்களை அணுகி, இசுலாமிய மதத்துக்கு மாற்றம் செய்யும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளார். இதற்கு 'நியு விஷன்' என்ற அமைப்பைத் தொடங்கியுள்ளார்'' என 'ஆதாரங்களை' அடுக்கியிருக்கிறார்.

முசுலீம் தற்காப்புப் படை அமைப்பது குறித்து ஆலோசனை செய்ததே பயங்கரவாதம் என்றால், முசுலீம்களுக்கு மூளை என்ற சிந்திக்கும் உறுப்பு இருப்பதே அச்சம் தரக் கூடியதாகி விடும். பார்ப்பன ஜெயா, மதமாற்றத்தை கிரிமினல் குற்றமாக்கினால், தமிழக போலீசோ மதமாற்றத்தைப் பயங்கரவாதமாகக் காட்டுகிறது. தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறு அடி பாய்கிறது. ஜக்காரியாவும், தௌபிக்கும் சவூதி அரேபியாவில் வேலை பார்த்துவிட்டுத் திரும்பியிருப்பதைத்தான், இவர்களுக்கும் சர்வதேசிய தீவிரவாதிகளுக்கும் இடையே தொடர்பு இருப்பதற்கான ஒரே ஆதாரமாகக் காட்டுகிறது, போலீசு.

''தற்பொழுது கைது செய்யப்பட்டுள்ள அமீது பக்ரி வெளிநாட்டு உதவியோடு அரபி பள்ளியொன்றை நடத்தி வருகிறார். இவர் நடத்தி வந்த அரபிப் பள்ளியில் இவரால் மதம் மாற்றம் செய்யப்பட்ட தலித்துகள்தான் படிக்கிறதா எங்களுக்குத் தகவல். மத்தபடி இவரைப் பத்தி சொல்லிக்கும்படியா எந்த டெரர் தகவலும் இல்லை'' என போலீசாரே உண்மையைக் கசிய விட்டுள்ளனர். (நக்கீரன், 13.12.2002)

இந்தக் கசிந்த செய்தி உண்மையென்றால், போலீசாரால் அமீது பக்ரி கைது செய்யப்பட்டதற்கான காரணம், அவர் பெங்களூரில் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட இமாம். அலியின் அக்காள் கணவர்; அமீது பக்ரிக்கும் இமாம் அலிக்கும் இயக்க ரீதியில் தொடர்பு உண்டு என்ற போலீசின் ஊகம் - இந்த இரண்டைத் தவிர வேறு காரணம் இருக்க வாய்ப்பில்லை.

வெறும் எட்டு கிலோ வெடிமருந்தை வைத்துக் கொண்டு, இந்தத் தீவிரவாதிகள் தமிழகக் கோயில்களைத் தகர்க்கச் சதித்திட்டம் போட்டது எப்படி என்பது போலீசின் கிரிமினல் மூளைக்கு மட்டுமே எட்டும் இரகசியம். மேலும், ''கோவை வெடிகுண்டு வழக்கில் சிக்கியிருக்கும் வெடிகுண்டு நிபுணன் ஜாகிர் உசேன் கொடுத்த எட்டு கிலோ மருந்தை இவங்கள்ட்ட பறிமுதல் செஞ்சதா சொல்லப்படுவதில் எந்த உண்மையும் இல்லை. ... அந்த குண்டுகளே இப்ப மிச்சம் இருந்தாலும், அது வெடிக்கும் திறனை இழந்து வெறும் மணல் பொதியாகத்தான் இருக்கும்'' என்ற செய்தியும் போலீசிடமிருந்து கசிந்து வெளிவந்துள்ளது.

**பார்ப்பன ஜெயா மதமாற்றத்தை கிரிமினல் குற்றமாக்கினால், தமிழக போலீசோ மத மாற்றத்தைப் பயங்கரவாதமாகக் காட்டுகிறது. தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறு அடி பாய்கிறது.**

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, கைது செய்யப்பட்டுள்ள முசுலீம்களைப் பற்றி ஒன்றுக்குப் பத்தாய் ஊதிப் பெருக்கிப் பீதியூட்டுவதற்கு, ''சென்னை போலீசாருக்கும் மாநிலப் புலனாய்வுப் பிரிவினருக்கும் இடையே நடந்து வரும் ''ஈகோ'' யுத்தம்தான் காரணம்; சமீபகாலமாகத் தங்களுக்குச் சரியாக ஒத்துழைப்பு தராத புலனாய்வுப் பிரிவினருக்குச் சங்கடத்தை ஏற்படுத்த, இப்படிப்பட்ட கட்டுக் கதைகளை சென்னை போலீசு உலவவிடுவதாக, உளவுப் பிரிவு கூறிவருவதாக நக்கீரன் (13.12.2002 இதழில்) செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழகக் கோயில்களைத் தகர்க்கப் பயங்கரவாத சதி - சர்வதேசத் தீவிரவாதிகளோடு தொடர்பு எனப் பீதியூட்டி, தமிழக போலீசு இவர்களைக் கைது செய்த அதேவேளையில், கோவை தனி நீதிமன்றம், 19 முசுலீம் தீவிரவாதிகளை நிரபராதிகள் எனத் தீர்மானித்து விடுதலை செய்தது.

1993 நவம்பர்-26 அன்று, கோவையில் உள்ள உக்கடம் பகுதியில் உள்ள அல்அமீன் காலனியில் ஒரு வீட்டில் சதி ஆலோசனை நடந்ததாகவும், அந்த வீட்டைச் சோதனையிட்டதில் 4.4 கிலோ வெடி பொருட்களும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் கூறி, தமிழக போலீசு பாஷா, அன்சாரி, ஜாகீர் உசேன் உட்பட இருபத்தோரு பேர் மீது ''தடா'' சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்தது. ''தடா'' சட்டம் காலாவதியாகிப் போனதால், இந்த வழக்கு கடந்த நவம்பர் மாதம் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இவ்வழக்கை விசாரித்து வந்த தனி நீதிமன்றம் டிசம்பர் முதல் வாரம் அளித்த தீர்ப்பில், குற்றஞ்சாட்டப்பட்ட 21 பேரில், தலைமறைவாக இருக்கும் முஜிபுர் ரஹ்மான், ஹைதர் அலி ஆகிய இருவர் தவிர, மீதி 19 பேரையும் நிரபராதிகள் எனத் தீர்ப்பளித்து விடுதலை செய்துவிட்டது. இந்தச் சதி வழக்கு போலீசாரால் பொய்யாக ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''இந்தப் புகார் உள்ளிட்ட ஆவணங்களைக் கையில் வைத்துக் கொண்டு, எவ்வளவு பேரை இவ்வழக்கில் சேர்க்க முடியுமோ, அவ்வளவு பேரைச் சேர்த்திருப்பது புரிகிறது.

''குற்றம் சாட்டப்பட்ட 19 பேரும் கூடிச் சதி ஆலோசனை நடத்தியதாகச் சொல்லி இருக்கிறீர்கள். குறிப்பிட்ட நாளில், இதில் இரண்டு பேர் மதுரையில் நிபந்தனை பிணையில் தினசரி கையெழுத்திட்டுள்ளார்கள். ஒருவர் வேறொரு வழக்குக்காக கோவை சிறையில் இருந்திருக்கிறார். இது நிரூபிக்கப்பட்டும் உள்ளது.''

''குற்றத்தை நிரூபிக்க அரசு தரப்பு சொன்ன மற்ற விசயங்களும் கூடச் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டு இருக்கவில்லை. சதி ஆலோசனையின் தொடர்ச்சியாக சம்பந்தப்பட்டவர்கள் ஒளித்து வைத்திருந்த அரிவாள் போன்ற ஆயுதங்களை (!) அங்குள்ள மாட்டுக் கொட்டகையில் இருந்து எடுத்ததாகச் சொல்லியிருக்கிறீர்கள். சம்பவம் நடந்த இடமாக நீங்கள் சொல்வது அடுக்குமாடிக் குடியிருப்பு. அங்கு எப்படி மாட்டுக் கொட்டகை வந்தது?.... இப்படி பல விசயங்களில் எனக்குச் சந்தேகங்கள் எழுகின்றன. இந்த வழக்கு புனையப்பட்ட வழக்கு அல்ல என்பதை முழுமையாக நிரூபிக்க அரசுத் தரப்பு தவறியிருக்கிறது'' எனத் தனி நீதிமன்றம் தனது தீர்ப்பில் போலீசின் குறுக்கு புத்தியை அம்பலப்படுத்தியிருக்கிறது.

முசுலீம் பயங்கரவாதிகள் தொடர்பாகத் தொடுக்கப்படும் வழக்குகள் - கைதுகளில் பெரும்பாலானவற்றுக்கு, போலீசின் சந்தேகம், ஊகம், புளுகு, குறுக்கு புத்திதான் அடிப்படை ஆதாரங்களாக அமைகின்றன என்பதை இந்தத் தீர்ப்பும், டிசம்பர் 6-ஐ யொட்டி நடந்த கைதுகளும் மீண்டுமொருமுறை அம்பலப்படுத்தி விட்டன.

● செல்வம்


படிப்பகம்

www.padippakam.com

## முசுலீம் பயங்கரவாத பீதி

# ஈரைப் பேனாக்கும் போலீசு பேனைப் பெருமாளாக்கும் பத்திரிகை

கடந்த ஆண்டு நவம்பர் கடைசி வாரத்திலும், டிசம்பர் முதலிரண்டு வாரங்களிலும் மைய நீரோட்டப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் அட்டைப்படக்கட்டுரைகள் அல்லது சிறப்புச் செய்திக் கட்டுரைகள் எல்லாமே முசுலீம் பயங்கரவாதிகள் மற்றும் நக்சலைட்டு தீவிரவாதிகள் பற்றிதான் இருந்தன.

தீவிரவாதி, பயங்கரவாதி என்றாலே நோக்கமற்ற குரூரமான, வக்கிரமான வன்முறையாளன் என்று சினிமாக்காரர்கள் கதை கட்டிவிடுகிறார்கள். இந்த சினிமாக்காரனின் கற்பிதத்துக்கு கண், காது, மூக்கு வைத்துப் பல்வேறு கிசுகிசு – வதந்திகளைப் பரப்புகின்றன பத்திரிகைகள். இவற்றுக்கு உயிரும் உருவமும் கொடுத்து உலவ விடுகிறார்கள் போலீசுக்காரர்கள். ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்குவதில் இந்த மூன்று துறையினருமே கெட்டிக்காரர்கள்தாம்.

ஆந்திரா மற்றும் மைய உளவுத் துறை கொடுத்த தகவலை வைத்து, திறமையாகச் செயல்பட்ட தமிழகப் போலீசார் இங்கு பல்வேறு இடங்களில் ஒரு 20 முசுலீம் தீவிரவாதிகளைப் பிடித்தனர். இவர்கள் பாகிஸ்தானின் லஸ்கர் - இ - தொய்பா என்ற தீவிரவாத அமைப்பின் தமிழகக் கிளையைச் சேர்ந்தவர்கள்; முசுலீம் பாதுகாப்புப் படை என்ற பெயரில் செயல்படும் இவர்கள் சவுதியில் பயிற்சி பெற்றவர்கள்; பயங்கர வெடிபொருட்களை வைத்திருந்தார்கள்; சாதிக் கலவரங்களைத் தூண்டி, பின்னர் மைய அமைச்சர்கள், தமிழக அரசியல் தலைவர்கள், பத்திரிகை ஆசிரியர்களைக் கொலை செய்யவும், கோயில்களை வெடிவைத்துத் தகர்க்கவும் திட்டமிட்டிருந்தார்கள்' என்று மூன்று வாரங்கள் தலைப்புச் செய்திகளாக வந்தன.

'தர்மபுரி மாவட்டத்தில் ஆயுதப் பயிற்சி பெற்ற ஐந்து பெண்கள் உட்பட 25 நக்சலைட்டு தீவிரவாதிகளை போலீசு சுற்றிவளைத்துப் பிடித்துள்ளது; அமைச்சராக இருந்த தம்பிதுரை உட்பட, பல முக்கிய பிரமுகர்களைக் கொல்லச் சதித் திட்டம் தீட்டியிருந்தார்கள்; மலைகள் – காடுகள் மூலமாக ஆந்திர நக்சலைட்டுகளுடன் வலைப்பின்னலை உருவாக்கி, பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபடவிருந்தனர்' என்று செய்தி ஊடகங்களில் பரப்பப்பட்டது.

இவை புளுகு, வதந்திகளாக மட்டுமில்லை; பீதியூட்டுமளவு மிகைப்படுத்தித் தரப்பட்டன. ''ஆயிரம் வோல்ட் மின்சாரக் கம்பியைத் தொட்டதுபோல் ஷாக்காகி இருக்கிறது, தமிழக போலீசு. தமிழகத்தில் முகாமிட்டிருந்த தீவிரவாதிகளின் நெட் ஒர்க்கையும் பயங்கரமான திட்டங்களையும் கண்டுபிடித்ததில் மிரண்டு போயிருக்கிறது.'' ''தீவிரவாதிகளின் திட்டப்படி குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நடந்திருந்தால் ஒட்டு மொத்த தமிழகமும் நிலைகுலைந்து போயிருக்கும்.''

''வெடிகுண்டுத் தாக்குதல் என்பதோடு மட்டுமல்லாமல், தமிழகத்தைக் கலவர பூமியாக மாற்றவேண்டும் என்கிற புதுயுக்தியோடு ஜாதிக் கலவரத்தைத் தூண்டிவிடும் முயற்சியில் தீவிரவாதிகள் தமிழகத்தில் ஊடுருவியிருக்கும் தகவலால் அரண்டு போயிருக்கிறது, காவல்துறை.'' ''இன்னும் பிடிபடாமல் தலைமறைவாக உள்ள தீவிரவாதிகளைப் பிடிக்கும் வரை போலீசுக்குத் தூக்கமில்லாத இரவுகள்தான்.''

இன்னும் இது போன்ற பீதியூட்டும் வர்ணனைகள், தீவிரவாதிகள் இரகசியமாகச் சதிசெய்ததையும், துபாயிலிருந்து மல்லிப்பட்டினத்துக்கு தொலைபேசியில் பேசி உத்தரவு போட்டதையும் நேரில் கேட்டதைப் போல பத்திரிகைகள் எழுதுகின்றன.

ஆனால், இவை அனைத்தும் வெறும் பொய்யும் புனைசுருட்டும் தான் என்பதற்கு ஆதாரமாக போலீசு உயர் அதிகாரிகளின் வாக்குமூலங்களே உள்ளன.

நவம்பர் 30–ந் தேதி செய்தியாளர்களிடம் பேசிய டி.ஜி.பி. நெயில்வால், ''நக்சலைட்டுகளுக்கு அல் – உம்மா தீவிரவாதிகளோடும், வீரப்பனோடும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. ஆந்திரா, நக்சலைட்டுகளுடன் தொடர்பு இருக்கிறதா என்பதை இனி மேல்தான் ஆய்வு செய்து கண்டு பிடிக்க வேண்டும்'' என்று கூறினார்.






படிப்பகம்

www.padippakam.com

முசுலீம் தீவிரவாதிகள் குறித்து விசாரணை நடத்தும் போலீசு அதிகாரி சைலேந்திரபாபு, குமுதம் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு கூறினார்:

''வெளிநாட்டில் நேரடியாக ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் யாரும் இல்லை என உறுதியாகச் சொல்லலாம். ஆனால், ஐதராபாத்தில் உள்ள ஒரு சிலர் துபாய் வழியாக பங்களாதேஷ், ஆப்கான் சென்று ஆயுதப் பயிற்சி பெற்றுள்ளனர். அதேநேரத்தில், அதிராம்பட்டிணத்திலும், காயல்பட்டிணத்திலும் சமீப காலமாகப் பயிற்சியை ஆரம்பித்துள்ளனர். அது ஆயுதப் பயிற்சி இல்லை. சிலம்பு, கராத்தே ஆகியவற்றில் மட்டுமே பயிற்சி பெற்றுள்ளனர்.''




ஆக, வெளிநாட்டிலோ உள்நாட்டிலோ ஆயுதப் பயிற்சி பெறவில்லை. சிலம்பு, கராத்தே பயிற்சி மட்டும் பெற்றனர் என்பதுதான் உண்மை. இவை ஆயுதப் பயிற்சி அல்ல; பொதுமக்களும் பள்ளிச் சிறுவர்களும் கற்றுக் கொள்ளும் வீர விளையாட்டுக்கள்தான். இதையே ஆயுதப் பயிற்சி என்று கூறி போலீசும், பத்திரிகைகளும் பீதியூட்டுகின்றன.

பொது இடங்களில் இந்த ஆயுதப் பயிற்சியோடு, துப்பாக்கி, வீச்சரிவாள் வைத்துப் பூசை போடுகிறார்கள் ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதிகள். ஆனால், அப்பாவி முசுலீம் இளைஞர்களைப் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்திச் சித்திரவதைக்குள்ளாக்குகிறார்கள். ஆதாரமற்ற பொய் வழக்குகள் போடப்படுகின்றன.

''பொடா'' சட்டம் அமலுக்கு வந்ததும் முதல் வழக்கு ஒரு முசுலீம் இளைஞன் மீது போடப்பட்டது. 'விமானம் ஓட்டப் பயிற்சி பெற்றான்; அவன் பின்லேடனின் அல்-கெய்தா தீவிரவாதி' என்று குற்றஞ்சாட்டப்பட்டான். ஆனால், அவன் விளையாட்டுக்காக விமானம் ஓட்டுவதற்குப் பயின்றவன் என்பது நிரூபணமாகி விடுதலையானான். பார்ப்பன ஆட்சிகளும், போலீசும் எப்படிப் பீதியூட்டுகின்றன என்பதற்கு இதுவே சாட்சியம்.

● மாணிக்கவாசகம்

## கலப்புத் திருமணத்திற்கு எதிராக கட்டப் பஞ்சாயத்து! இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவரின் அடாவடி!

திருத்துறைப்பூண்டி வட்டம் எடையூர் பகுதி அம்மனூர் கிராமம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் அய்யாபிள்ளை. இவரது மகள் ஜமுனாராணியும் அதை ஊரைச் சேர்ந்த தனவந்தக் கோனார் மகன் சத்தியமூர்த்தியும் கடந்த மூன்று ஆண்டுகளாகப் பழகி வந்தனர். அவர்கள் 14.11.2002 அன்று சென்னை வடபழனி கோயிலில் திருமணம் செய்து கொண்டு, மணமகன் அண்ணனிடம் ஆசிவாங்க சென்றனர். அங்கிருந்த மணமகனின் உறவினர்கள், தம்பதிகளைக் காரில் கடத்திச் சென்று திருத்துறைப்பூண்டி கள்ளிக்குடியில் வைத்து சரமாரியாக அடித்தனர். மணமகளின் தாலியை அறுத்து. ''பள்ள சிறுக்கிக்கு கோனார் உடம்பு கேக்குதா'' என்று இழிவுபடுத்திவிட்டு, பின்னர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். மணமகனை மட்டும் பத்திரமாக அவர்களே ஒளித்து வைத்துவிட்டனர்.

அதன்பிறகுதான் கட்ட பஞ்சாயத்து புகழ் ஓவரூர் பக்கிரிசாமி வருகிறார்! இவர் வலது கம்யூனிஸ்டு கட்சியின் விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் ஆவார். பஞ்சாயத்து தீர்ப்பு பக்கிரிசாமியால் சொல்லப்படுகிறது.

''ரெண்டு பேரையும் விசாரிச்சு பார்த்து ஒரு முடிவுக்கு வந்திருக்கேன். அதாவது, இந்த பொண்ணையும், அந்தப் பையனையும் சேர்த்து வைக்கலாம்னா, பையன் கல்யாணம் பண்ணிக்க முடியாதுங்கிறான். அதையும் மீறி கல்யாணம் பண்ணி வச்சிட்டு, அவன் நாளைக்கு குடும்பம் நடத்துறானா? என கம்யூனிஸ்ட் கட்சி கண்காணிக்க முடியாது... ஆக நான் என்ன சொல்றேன்னா, பாதிக்கப்பட்ட இந்தப் பொண்ணுக்கு மணமகன் ஒரு லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு தரணும்னு தீர்ப்பு சொல்றேன்'' என்றார்.

இந்த அநியாயத்தைக் கண்டு, பெண்ணின் தந்தை வெகுண்டு எழுந்து ''2 லட்சம் பணம் குடுத்தா உன் பெண்ணைக் குடுப்பியா?'' என்றார்.

பின்னர், பகுதியிலுள்ள இளைஞர்கள் – உறவினர்கள் முயற்சியால், ஜமுனாராணி தொடர்ச்சியாகப் போராடினார். அதன்பிறகு போலீசார் வேறு வழியின்றி சத்தியமூர்த்தியையும் அவரது உறவினர்களையும் கைது செய்தனர்.

இதற்கிடையில் ஓவரூர் பக்கிரிசாமி, மணமகன் சார்பாக, பேரம் பேசி ரூபாய் பத்தாயிரத்தை போலீசுக்கு இலஞ்சமாகக் கொடுத்து வழக்கை திசை திருப்ப முயற்சித்து, அம்பலப்பட்டு போனார்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியையும், அதன் தலைவர்கள் - உறுப்பினர்களையும் தம் வீட்டு விதைநெல்போல் பாதுகாத்தனர் அப்பகுதி தாழ்த்தப்பட்ட விவசாயிகள். ஆனால் பக்கிரிசாமி போன்ற அக்கட்சியின் தலைவர்களோ, தாழ்த்தப்பட்ட மக்களைக் கழிவறை காகிதம் போலத்தான் கருதுகின்றனர். இதன்விளைவாக, முன்பு உழைக்கும் வர்க்கமாக ஓரணியில் திரண்டிருந்த இப்பகுதிவாழ் மக்கள் இன்று சாதிரீதியாகப் பிளவுபட்டுள்ளதோடு, பொதுவில் கம்யூனிஸ்டுகளையே இழிவாகப் பார்க்கும் விபரீத நிலைமை ஏற்பட்டுள்ளது. இருப்பினும், போலி கம்யூனிசத் துரோகிகளின் யோக்கியதையை அனுபவரீதியாக உணர்ந்து வரும் உழைக்கும் மக்கள், ஜமுனாராணிக்கு ஆதரவாக நின்று போராடவும் போலி கம்யூனிச கட்டப்பஞ்சாயத்து ''தாதா''க்களின் முகத்திரையைக் கிழிக்கவும் தயாராகி வருகின்றனர்.

— தகவல்:
பு.மா.இ.மு; திருத்துறைப்பூண்டி.

www.padippakam.com

## தருமபுரியில் நக்சலைட்டு ஒழிப்பு வேட்டை:

# போலீசுக்குத் துப்பாக்கி பத்திரிகைக்கு பேனா

கடந்த நவம்பர் மாத இறுதியில், தருமபுரி மாவட்டத்திலுள்ள ஊத்தங்கரைக்கு அருகேயுள்ள சில கிராமங்களில் தமிழக போலீசு நடத்திய நக்சலைட்டு ஒழிப்பு - தேடுதல் வேட்டையில், முற்போக்கு இளைஞர் அணியைச் சேர்ந்த தோழர் சிவா சுட்டுக் கொல்லப்பட்டார். மேலும், அவ்வமைப்பைச் சேர்ந்த ஐந்து பெண்கள் உள்ளிட்டு, 26 தோழர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களுள் ஐந்து பெண் தோழர்கள் உள்ளிட்டு, பத்து தோழர்களை விசாரணை என்ற போர்வையில் போலீசு காவலில் ஒப்படைத்து விட்டது, நீதிமன்றம்.

போலீசின் இந்த வேட்டை தருமபுரி மாவட்டத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுள்ள தோழர்களின் வீடுகளைத் தேடிப்போய், சோதனை, விசாரணை எனப் பீதியூட்டியது போலீசு.

தோழர் சிவா சுட்டுக் கொல்லப்பட்டதில் எவ்வித மனித உரிமையும் மீறப்படவில்லை எனப் புளுகும் போலீசார், ''இத்தேடுதல் வேட்டைக்கு மக்களே உதவினார்கள்; மக்கள்தான் நக்சலைட்டுகளைச் சுட்டுக் கொல்லச் சொன்னார்கள்'' என ஒன்றுக்குப் பத்தாய் ஊதிப் பெருக்கிக் கொண்டும் திரிகிறார்கள். இதன்மூலம், நக்சல்பாரி இயக்கம் தருமபுரி மாவட்டத்தில் முற்றிலுமாக மக்கள் செல்வாக்கை இழந்துவிட்டது, அவர்களின் அனுதாபத்தைக் கூட இழந்துவிட்டது எனக் காட்டிவிட முயலுகிறது, தமிழக போலீசு.

### நடந்தது என்ன?

முற்போக்கு இளைஞர் அணியின் (மு.இ.அ.) தலைமை, தங்களின் அமைப்பைச் சேர்ந்த ஊழியர்களுக்கு நவம்பர் மாத இறுதியில் அரசியல் – ஆயுதப் பயிற்சி கொடுக்க முடிவு செய்திருந்தனர். இதற்காக, ஊத்தங்கரைக்கு அருகில் உள்ள சின்னஜோகிப்பட்டி கிராமத்தை ஒட்டியுள்ள ஒரு மாந்தோப்பைக் குத்தகைக்கு எடுத்தனர்.

முற்போக்கு இளைஞர் அணி பற்றியோ, அதனின் அரசியல் பற்றியோ சின்னஜோகிப்பட்டி கிராம மக்களுக்கு எதுவும் தெரியாது. இதனால், மாம்பழம் பறிப்பது. அல்லது மருந்தடிப்பது போன்ற வேலைகள் நடக்காத சமயத்தில், மாந்தோப்பில் ஆண்களும், பெண்களுமாக ஏறத்தாழ 40 பேர் கூடியிருந்ததை அக்கிராம மக்கள் வித்தியாசமாகப் பார்த்துள்ளனர். மேலும், இந்தக் கிராமத்தில் கொஞ்சம் வசதியான, மேல்சாதியைச் சேர்ந்த ஒரு போலீசுக்காரனின் பெற்றோர்கள் வசித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இச்சூழ்நிலையில், சின்ன ஜோகிப்பட்டியில் உள்ள ஒரு மாந்தோப்பில் ஆயுதப் பயிற்சி எடுக்கப்படுவதை, எப்படியோ, எந்த உளவாளி மூலமோ தெரிந்து கொண்ட போலீசார், இது பற்றி விசாரிக்க நவம்பர் 23 இரவு அக்கிராமத்திற்கு வந்து சென்றுள்ளனர்.

போலீசு விசாரித்துச் சென்ற விவரத்தைத் தெரிந்து கொண்ட மு.இ. தோழர்கள், நவம்பர் 24 அதிகாலையில் வேறு இடத்துக்கு மாறிச் செல்ல முடிவு செய்தனர். அவர்கள் வேறு இடத்திற்கு மாறிச்செல்லும் தகவல், அன்று காலையிலேயே, அவர்கள் சாமப்பட்டியைக் கடந்து செல்லும் பொழுதே போலீசுக்கும் போய்விட்டது.

சாமல்பட்டியைக் கடந்து நடந்து சென்று கொண்டிருந்த தோழர்களை சின்னக்கணக்கம்பட்டி அருகே போலீசு படை சுற்றி வளைத்தது உடனே, தோழர் சிவா ஒரு கையெறி குண்டை வீசிவிட்டு போலீசை நோக்கிச் சுட்டதாகவும், இதில் ஆய்வாளர் ஏகநாதனுக்குக் காலில் சிறு காயம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதே சமயம், ஏகநாதன், தனது நவீன கைத்துப்பாக்கியால் சிவாவைச் சுட்டுக் கொன்றுவிட்டார். போலீசார் அதிக எண்ணிக்கையிலும், கூடுதல் ஆயுதங்களுடனும் இருந்ததால், பிற தோழர்கள் சிவாவின் உடலைக்கூடத் தூக்கிச் செல்ல வாய்ப்பின்றித் தப்பி ஓட வேண்டியதாகிவிட்டது. அன்று மாலைக்குள் ஆங்காங்கே ஒளிந்து கொண்டிருந்த ஆறு தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

**தலையில் சுட்டுக் கொல்லப்பட்ட தோழர் சிவா.**



அடுத்த இரண்டு நாட்களும் சின்னக் கணக்கம்பட்டி, நெரிஞ்சிப்பட்டி, கொப்ப நாயக்கன்பட்டி, கம்பளிப்பட்டி ஆகிய ஊர்களில் நடந்த தேடுதல் வேட்டையில் பிற தோழர்கள் கைது செய்யப்பட்டனர். தோழர் பாலனின் தலையைத்துப்பாக்கிக் குண்டு உரசிச் சென்றதால், பலத்த காயம் ஏற்பட்டு, மயங்கிச் சரிந்த பின் கைது செய்யப்பட்டார்.

இப்பகுதி மக்களுக்கு இயக்கம் பற்றி எதுவும் தெரியாததால், பதுங்கி இருந்த தோழர்களைப் பிடிக்க போலீசுக்கு உதவியுள்ளனர். இதற்குக் காரணம் தருமபுரி மாவட்டத்தில் மு.இ. அணியின்

www.padippakam.com

செயல்பாடுகள் சுருங்கிப் போய்விட்டன. அவர்கள் செயல்பட்டு வரும் நாய்க்கன் கொட்டையை ஒட்டிய கிராமப்புறங்களில் கூட, மக்கள் மத்தியில் அரசியல் பிரச்சாரம் செய்வது கிடையாது. மக்களைப் பாதிக்கக்கூடிய பொருளாதார பிரச்சினைகளுக்கான போராட்டங்களையும் அவர்கள் எடுப்பதில்லை. மக்களிடம் பொதுவான அரசியல் பேசுவது, அவர்களது சொந்த பிரச்சினைகள், குடும்பப் பிரச்சினைகள், கொடுக்கல் – வாங்கல் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது போன்றவற்றைத் தான் அரசியல் வேலைகளாகச் செய்து வருகின்றனர்.

**முற்போக்கு இளைஞர் அணியினர் தற்காப்புக்காக எடுத்த இந்த ஆயுதப் பயிற்சியைப் பயங்கரவாதம் என முத்திரை குத்தும் போலீசும், பத்திரிகைகளும் இந்து மதவெறி அமைப்புகள் நாடெங்கிலும், பகிரங்கமாக நடத்திவரும் ஆயுதப் பயிற்சி முகாம்களைக் கண்டு இப்படி அலறுவதில்லை.**

மேலும், பாசிச அடக்குமுறை நிலவுவதைக் காரணம் காட்டி, வெளிப்படையான மக்கள் திரள் அமைப்பு, வெளிப்படையான அரசியல் வேலைகள் கூடாது எனக் கையைக் கழுவிவிட்டனர். மக்களிடம் இருந்து தனிமைப்பட்டு இருந்த அதே வேளையில், அவர்களோ, ''தருமபுரி தங்களது தளப் பிரதேசம்; இங்கு விரைவில் கொரில்லா மண்டபம் அமைப்போம்'' என்ற மிதமிஞ்சிய கற்பனையை நடைமுறைப்படுத்த முயன்றனர்.

இவர்கள் பயிற்சிக்குத் தேர்ந்தெடுத்த பகுதியும் கூட, அமைப்புக்கு அறிமுகமான, ஆதரவான பகுதி கிடையாது. மாந்தோப்பு அடர்த்தியாக இருக்கிறது; மாந்தோப்பை ஒட்டி சென்ராயன் மலை இருக்கிறது என்ற பூகோள அம்சங்களை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு, பயிற்சி முகாமை ஜோகிப்பட்டியில் அமைத்துள்ளனர். பயிற்சி பற்றிய தகவல் போலீசுக்குப் போய்விட்டது எனத் தெரிந்தவுடனேயே, பயிற்சித் திட்டத்தைக் கைவிட்டு, அன்றிரவே தோழர்களைத் தனித்தனிக் குழுக்களாகப் பிரித்து, வேறு வேறு வழிகளில் அனுப்பத் தவறியுள்ளனர். இந்தத் தவறுகள் மற்றும் அமைப்பில் நிலவும் பலவீனங்கள்தான் பயிற்சிக்கு வந்திருந்த பெரும்பான்மையான தோழர்களை, போலீசு பொது மக்கள் உதவியோடு சுற்றி வளைத்துப் பிடிக்க ஏதுவாக அமைந்துவிட்டது.

**போலீசின் மனித உரிமை மீறல்கள்**

''சிவா வெடிகுண்டை வீசி எறிந்து விட்டுச் சுட்ட பொழுது, அந்த இடத்தில் பொதுமக்களும் இருந்ததாகவும், பொது மக்களைப் பாதுகாக்கவும், தன்னைத் தற்காத்துக் கொள்ளவுமே போலீசார் திருப்பிச் சுட்டதாக'' சிவாவின் கொலை நியாயப்படுத்தப்படுகிறது.

மு.இ.அ. தோழர்கள் சின்னக் கணக்கம்பட்டி வழியாகச் செல்லுவார்கள் என உளவறிந்து கொண்ட போலீசார், அந்தக் கிராமத்திற்குள் நுழைந்தவுடனேயே, ''வீட்டை விட்டு யாரும் வெளியே வரக்கூடாது; சன்னல் கதவுகளைக்கூடத் திறந்து வைக்கக் கூடாது'' என மிரட்டி, அக்கிராம மக்களை வீடுகளுக்குள் அடைத்துவிட்டனர். சிவாவை போலீசு சுட்டுக் கொன்ற இடத்தில், பொதுமக்கள் யாரும் நிற்கவில்லை என்பதைப் பல்வேறு மனித உரிமை அமைப்புகளின் விசாரணைகள் அம்பலப்படுத்தியுள்ளன. மேலும், தன்னைத் தற்காத்துக் கொள்ளவே சிவாவைச் சுட்டதாகக் கூறும் போலீசார். முழங்காலுக்குக் கீழே சுடாமல், சிவாவின் தலையை நோக்கிச் சுட்டுக் கொன்றுள்ளனர். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், உழவர் உழைப்பாளர் மாமன்றத்தைச் சேர்ந்த தோழர் ரவீந்திரன் போலி மோதல் மூலம் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில், தோழர் சிவாதான் ஒரே நேரடியான சாட்சி. சிவாவைக் கொன்றதன் மூலம், அந்த வழக்கின் தலையிலும் தண்ணீரை ஊற்றிவிட்டது, போலீசு.

இத்தேடுதல் வேட்டையில் தோழர் சிவா சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டார்; 26 தோழர்கள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஆறு தோழர்கள் தப்பித்துத் தலைமறைவாகி விட்டனர். இந்த 33 தோழர்களைத் தவிர்த்து, பயிற்சிக்கு வந்திருந்த ஆறு அல்லது ஏழு தோழர்களைப் பற்றி எந்த விவரமும் தெரியவில்லை எனக் கூறப்படுகிறது. சிவில் உரிமைகளுக்கான மக்கள் ஒன்றியம், சிறையில் அடைக்கப்பட்டுள்ள பெண் தோழர்களைச் சந்தித்த பொழுது, அவர்கள் அக்குழுவினரிடம், ஆந்திராவில் இருந்து வந்திருந்த யசோதா மற்றும் பிரசன்னா என்ற இரு தோழர்கள் போலீசால் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறியுள்ளனர். ஆனால், போலீசோ இது பற்றி ஒன்றும் சொல்லாமல், வாயை மூடிக் கொண்டு மௌனமாக இருப்பதன் மூலம், இக்குற்றச்சாட்டுகளை அவதூறுகளாகக் காட்டிவிட முயலுகிறது.

பிடிபட்ட ஆண் தோழர்களை அடித்து உதைத்ததோடு, அவர்களை அரைநிர்வாணமாக்கிப் படம் பிடித்து, அப்படங்களை பத்திரிகைகளிலும் பிரசுரிக்கச் செய்து, அரசியல் கைதிகளை கிரிமினல்களைப் போல நடத்தி அவமானப்படுத்தியது, போலீசு. கல்லாவி என்ற கிராமத்தில் பெண் தோழர்களின் ஆடைகளைக் களைந்து அரைநிர்வாணமாக நிற்க வைக்கப்பட்ட காட்டுமிராண்டித் தனத்தை, அக்கிராம மக்களே ஒன்று கூடி எதிர்த்துள்ளனர்.

விவசாயிகள் விடுதலை முன்னணி மற்றும் மக்கள் ஜனநாயக இளைஞர் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள், ''சிவாவின் உடலை ஊர்வலமாக எடுத்துச் செல்லவும், இரங்கல் கூட்டம் நடத்தவும்'' முயன்ற பொழுது, போலீசு அதற்கு அனுமதி தர மறுத்துவிட்டது. மேலும், சிவாவின் உடலை அடக்கம் செய்த பொழுது, சிவாவின் அண்ணன் மற்றும் அவரது நண்பர் ஆகிய இருவரைத் தவிர, வேறு யாரையும் மயானத்திற்குள் அனுமதிக்க மறுத்துவிட்டது. மயானத்தைச் சுற்றி போலீசை நிறுத்தி யாரும் புகுந்துவிடாத படி பார்த்துக் கொண்டது.


கைது செய்யப்பட்டவர்களுள் ஒருவரான பிரபாகரனின் வயது பதினான்குதான். இச்சிறுவனையும் நக்சல்பாரி என முத்திரை குத்தி, சிறையில் அடைத்து வைத்திருக்கிறது, போலீசு. இவை அனைத்துமே அப்பட்டமான மனித உரிமை மீறல்களாகும்.

மேலும், ''மோதலில் ஒருவர் கொல்லப்படும்பொழுது அதற்குக் காரணமான போலீசார் அனைவரின் மீதும் கொலை குற்றத்திற்கான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டும். மோதல் தவிர்க்க இயலாததுதான் என விசாரணையில் நிரூபணமான பிறகுதான் போலீசாரை அக்குற்றங்களில் இருந்து விடுவிக்க வேண்டும் என்பதுதான் சட்ட விதிமுறை. வழக்கம் போலவே, சிவா கொல்லப்பட்ட வழக்கிலும், போலீசார் இந்த விதியை அப்பட்டமாக மீறி வழக்குப் பதிவு செய்ய மறுத்து வருகின்றனர்.

இப்பயிற்சியின் பொழுது மு.இ. அணி தோழர்களிடம் இருந்தது சாதாரண நாட்டுத் துப்பாக்கிகள்தான். அவர்களிடம் இருந்த 6 துப்பாக்கிகளில் 4 பழுதடைந்தவை எனக் கூறப்படுகிறது. மலையாலும், காடுகளாலும் சூழப்பட்டுள்ள

www.padippakam.com

தருமபுரி மாவட்டப் பகுதியில் இந்த வகையான நாட்டுத் துப்பாக்கிகள் ஆயிரக்கணக்கில் புழக்கத்தில் இருப்பது ஊரறிந்த உண்மை. ஆனால், போலீசோ இதை மூடி மறைத்துவிட்டு, தேடுதல் வேட்டையின் பொழுது ஆயுதக் கிடங்கையே கைப்பற்றிவிட்டதைப் போலப் புளுகிக் கொண்டு திரிகின்றனர். கைது செய்யப்பட்ட தோழர்களின் வீடுகளில் நடத்தப்பட்ட சோதனையின் பொழுதும், தோழர்களின் கல்விச் சான்றிதழ்கள், குறிப்பேடுகள், சில துண்டுக் காகிதங்களைத்தான் போலீசு பொறுக்கி எடுத்துக் கொண்டு போய் இருக்கிறது.



பயங்கரவாதப் பீதியூட்டுவதற்காகவே, கைது செய்யப்பட்ட பெண் தோழர் ஒருவரின் வீட்டில் போலீசு நடத்திய சோதனை.

'தேசிய'ப் பத்திரிகைகள் தொடங்கி கிசுகிசு பத்திரிகைகள் வரை அனைத்தும், இச்சம்பவம் பற்றி போலீசு சொல்லியதையே வாந்தி எடுத்ததோடு, தங்களின் கீழ்த்தரமான கற்பனைகளையும், அவதூறுகளையும் சேர்த்து எழுதிச் செய்திகளாகிவிட்டன. கைது செய்யப்பட்ட தோழர்களின் வீடுகளுக்குள் புகுந்து போலீசு நடத்திய சோதனைகளையும், அவர்களின் உறவினர்கள் மிரட்டப்பட்டதையும் மனித உரிமை மீறலாகக் கூறாமல், போலீசின் சாகச நடவடிக்கையாகப் பத்திரிகைகள் சித்தரித்தன.

தோழர் சிவாவின் தியாகத்திற்குச் சிவப்பஞ்சலி செலுத்தியும், கைது செய்யப்பட்ட தோழர்களை விடுதலை செய்யக் கோரியும் ம.க.இ.க., பு.மா.இ.மு. அமைப்புத் தோழர்கள் ஒட்டியிருந்த சுவரொட்டிகளைக் கூட, பத்திரிகைகள் தீவிரவாதம் என முத்திரை குத்தின. இந்த ஜனநாயகத்தைக் கூட வழங்கக் கூடாது என போலீசுக்குப் போட்டுக் கொடுக்கும் பத்திரிகைகள் ஜனநாயகத்தின் தூணா, இல்லை, பாசிசத்தின் தூணா என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

முற்போக்கு இளைஞர் அணியினர் தற்காப்புக்காக எடுத்த இந்த ஆயுதப் பயிற்சியைப் பயங்கரவாதம் என முத்திரை குத்தும் போலீசும், பத்திரிகைகளும் இந்து மதவெறி அமைப்புகள் நாடெங்கிலும், பகிரங்கமாக நடத்தி வரும் ஆயுதப் பயிற்சி முகாம்களைக் கண்டு இப்படி அலறுவதில்லை. போலீசார் அப்பயிற்சி முகாம்களைச் சுற்றி வளைப்பதில்லை. அப்பயிற்சியில் கலந்து கொள்ளும் இந்து மதவெறிக் குண்டர்களை இப்படிக் கைது செய்வதுமில்லை; சுட்டுப் பொசுக்குவதுமில்லை. இந்து மதவெறியை எதிர்ப்பதாகக் கூறும் பத்திரிகைகள் கூட, இந்த ஊரில் இந்து மதவெறி அமைப்புகள் ஆயுதப் பயிற்சி வகுப்பு நடத்தினர் எனப் போகிற போக்கில் குறிப்பிடுகிறார்களே தவிர, அதைப் பயங்கரவாதம் என அம்பலப்படுத்துவதில்லை.

**மக்களின் நண்பர்கள் யார்? போலீசா? நக்சல்பாரிகளா?**

போலீசாரால் கைது செய்யப்பட்ட தோழர்கள், நக்சல்பாரிகள் என்பதை அறிந்து கிராம மக்கள் வருத்தமடைந்திருக்கிறார்கள். ஆனால், போலீசோ நக்சல்பாரிகளைப் பொதுமக்களின் எதிரிகளாகவும், போலீசை மக்களை நண்பனாகவும் காட்டப் படாதபாடு படுகிறது.

தருமபுரி மாவட்ட மக்களின் நன்மைக்காக, அங்கு நிலவும் கட்டப் பஞ்சாயத்தையும், கந்து வட்டியையும் ஒழித்துவிடப் போவதாக போலீசார் சபதம் போடுகின்றனர். ஆனால், போலீசு நிலையம் இருக்கும் வரை இதை ஒழித்துவிட முடியாது என்பது பாமரனுக்கும் புரியும். அது மட்டுமல்ல, தங்களின் வாழ்க்கை பிரச்சினைகளுக்காக இந்த அரசை எதிர்த்துப் போராடும் பொழுது, இந்த நண்பனின் யோக்கியதை என்ன என்பதும் மக்களுக்குத் தெரியும்.

தருமபுரி மாவட்டம் எங்கும் மக்கள் நீதிமன்றங்களை அமைக்கப் போவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, சட்ட விரோத கட்டப் பஞ்சாயத்துக்குப் பதிலாக, இனி, போலீசு நிலையத்தில் சட்டபூர்வ கட்டப் பஞ்சாயத்து நடைபெறும் என்பதுதான் இதன் பொருள்.

பின்தங்கிய தருமபுரி மாவட்டத்தை முன்னேற்றுவதற்காக, பல வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தப் போவதாக அறிவித்திருக்கிறார், ஜெயா. ரேசன் அரிசி விலையேற்றம், நெல் கொள்முதல் ரத்து, இலவச மின்சாரம் ரத்து, பேருந்து தனியார்மயம், அரசு ஊழியர் ஆட்குறைப்பு – வேலை நீக்கம் — இத்தாராளமயத் தாக்குதல்களின் மூலம் ஊர்த் தாலியை அறுக்கும் ஜெயா, தருமபுரி மாவட்ட மக்களின் ஏழ்மையைப் பார்த்து கண்ணீர் விடுகிறார் என்றால், அதை நம்பிவிடுவதற்கு தமிழக மக்கள் அடிமுட்டாள்கள் அல்ல.

நக்சல்பாரிகள் துப்பாக்கி வைத்திருக்கிறார்கள். அதனால் பயங்கரவாதிகள் எனப் பீதியூட்டுகிறது தமிழக அரசு. ஆனால், நக்சல்பாரிகளின் கையில் உள்ள துப்பாக்கி, பொதுமக்களை நோக்கித் திரும்பியதாக இவர்களால் நிரூபிக்க முடியுமா? இந்தத் தேடுதல் வேட்டையின் பொழுது, போலீசு கண்காணிப்பாளர் வந்த ஜீப்பின் ஓட்டுநரை, ஒரு தோழர் தப்பிப்பதற்காகத் தாக்க முனைந்த பொழுது, அவன் கருணைக் காட்டும்படி கெஞ்சவே, அந்தத் தோழரும் அவனை உயிரோடு விட்டு விட்டார்.

அதே சமயம், கொஞ்சம்கூட கருணையோ, ஈவு இரக்கமோ இன்றி நக்சல்பாரிகளை மட்டுமல்ல, அப்பாவி மக்களையும் அநியாயமாகக் கொல்லும் போலீசின் மிருகத்தனத்தைப் பட்டியல் போட்டு மாள முடியாது.

இந்த போலீசு பயங்கரவாதத்திற்கு இணையாக இன்னொரு பயங்கரவாதமும் நமது நாட்டில் இப்பொழுது தலைவிரித்தாடுகிறது. அதுதான் தனியார்மயம் – தாராளமயம். அரசால் திணிக்கப்படும் இந்தச் சந்தைப் பொருளாதாரம் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான உழைக்கும் மக்களைத் தற்கொலையை நோக்கித் தள்ளுகிறது.

இந்து மதவெறி பயங்கரவாதம், போலீசு பயங்கரவாதம், சந்தைப் பொருளாதார பயங்கரவாதம் — மக்களுக்கு எதிராகத் தொடுக்கப்படும் இச்சட்டபூர்வ பயங்கரவாதங்களை எதிர்த்துப் போராடத்தான் நக்சல்பாரிகள் ஆயுதமேந்தி இருக்கிறார்கள். உழைக்கும் மக்கள் இந்த உண்மையை உணர்ந்து கொள்ளும் போது, நாங்களும் நக்சல்பாரிகள்தான் என உரத்து முழங்குவார்கள்!

● ரஹீம்


படிப்பகம்

www.padippakam.com




# வாசகர் கடிதம்

● ''பட்டினிச் சாவின் பிடியில் இந்தியா'' என்ற கட்டுரையில் இந்தியா எப்படி இரு வேறு உலகங்களாகப் பிரிந்துள்ளது என்பதைத் தெளிவாக விளக்கியுள்ளீர்கள். பட்டினிச் சாவின் கோரத்தைப் படித்த போது இதயம் கனத்தது. தோழர் மலர் மன்னன் ''ஓம் சக்தி''க்கு எழுதிய மறுப்புக் கடிதம், வெறும் பதிலடி அல்ல; அது போலி கம்யூனிஸ்டுகளுக்குக் கொடுத்த சவுக்கடி! தோழர் மலர்மன்னன் தொடர்ந்து பு.ஜ.வில் எழுத வேண்டும் என்பதே என் விருப்பம்.

— செல்வி, மதுரை.

● முதலாளிகளையும் கட்சியின் உறுப்பி னர்களாக்கிக் கொண்டுள்ள சீனக் கட்சியின் நடவடிக்கைகளைப் புரட்சிகர மானதென்று புரட்டல்வாத சி.பி.ஐ; சி.பி.எம். கட்சியினர் புகழ் பாடுவதில் ஆச்ச ரியம் ஒன்றுமில்லை. இன்னும் ஒருபடி முன்னேறி, கம்யூனிஸ்ட் அகிலம் அமைத்து, அதன் தலைவராக ஜார்ஜ் புஷ்ஷையும் தலைமையிடமாக அமெரிக் காவையும் அவர்கள் நியமிக்கலாம்!

— ருத்ரன், காவேரிப்[illegible]ம்.

● டிசம்பர் இதழின் அட்டைப் பட கேலிச் சித்திரம் வெகுசிறப்பாகவும் சங்கராச்சா ரியின் வாய்க்கொழுப்பை அம்பலப்படுத் துவதாகவும் அமைந்துள்ளது. உங்களது கடும் உழைப்பும் அறிவுக் கூர்மையும் தெளிவும் ஒவ்வொரு இதழிலும் கண்கூ டாகத் தெரிகிறது. வெறும் ஐந்து ரூபாய்க்கு எமக்கு மிகவும் ஆற்றல் மிக்க ஆயுதத்தைத் தரும் உங்களுக்கு எனது புரட்சிகர வாழ்த்துகள்!

— முரளி, ஈரோடு.

● சங்கராச்சாரியின் வாய்க்கொழுப் பையும் தலைவிரித்தாடும் பார்ப்பன ஆதிக் கத்தையும் டிசம்பர் இதழ் எடுப்பாக விளக் கியது. பார்ப்பன ஆதிக்கம் தலைவிரித்தா டுவதற்கு, பார்ப்பன பாசிச ஜெயாவுக்குக் காவடி தூக்கிய போலி கம்யூனிஸ்டுகளும் ஒருவகையில் காரணமானவர்கள். அவர்க ளது துரோகத்தனத்தையும் ஜெயாவுடன் கூட்டணி கட்டிக் கொண்டுள்ள தலித்திய பிழைப்புவாதிகளையும் அம்பலப்படுத்து வது இன்று மிக அவசியம். தனியார் கல்லூரி மாணவர்கள் கொத்தடிமை கள்தான் என்பதற்கு தருமபுரியிலுள்ள பி.எம்.பி. கல்லூரியே சாட்சி. மாணவர்க ளோடு பெற்றோரும் ஆசிரியர்களும் இணைந்து போராடினால்தான் தனியார் கல்லூரிகளின் அக்கிரமங்களை முறிய டிக்க முடியும்.

— புரட்சித்தூயன், நல்லம்பள்ளி.

● 'சங்கராச்சாரியின் வாய்க்கொழுப்பு' கட்டுரையில் பார்ப்பனர்களின் ஆதிக்கம், திராவிட கட்சிகளின் வளர்ச்சியின் தொடக் கத்தில் பெரியாரின் முயற்சியால் அடக்கி வாசித்தது. ஆனால் இப்போது திராவிட கட்சிகளின் சந்தர்ப்பவாத சரணடைவு கார ணமாக அப்பட்டமாக பார்ப்பன வெறியாக தலைவிரித்தாடுகிறது. அட்டைப் படம் அமைந்துள்ள விதம் தலைப்புக்குப் பொருத்தமாக இல்லையென வாசகர்கள் கருதுகின்றனர்.

அமெரிக்காவின் பயங்கரவாதம் கட்டு ரையில், அமெரிக்காவின் ஈராக் மீதான தாக்குதலை எதிர்க்கும் ரசியா, பிரான்ஸ் போன்ற நாடுகள் தனது பொருளாதார நோக்கங்களுக்காவே எதிர்க்கின்றன என்பதைப் புள்ளிவிவரத்துடன் கூறியது சிறப்பானதாகும்.

— வாசகர் வட்டம், புதுவை.

● சென்னை நகரின் பல இடங்களில் உங்களது சுவரொட்டி விளம்பரத்தைக் கண்டு மனத்தூண்டுதலடைந்து டிசம்பர் பு.ஜ. இதழை விலை கொடுத்து வாங்கிப்ப டித்தேன். இதழின் செய்திகள் அனைத்தும் மனித சமுதாயத்திற்கு விழிப்புணர் வூட்டும் மதிப்புமிக்க செய்திகள் என்பதில் சந்தேகமில்லை.

— ஜோசுவா அமலதாசன்,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை.

● சங்கராச்சாரியின் பார்ப்பனத் திமி ரையும் ஜெயலலிதா அரங்கேற்றிவரும் பார்ப்பன பாசிசத்தையும் மிகச் சரியான தரு ணத்தில் திரைகிழித்துக் காட்டியுள்ளீர்கள். புதிய ஜனநாயகம் போன்ற இதழ்கள் பல்கிப் பெருகி, சமூக - அரசியல் - பண்பாட்டுத் தளங்களிலிருந்து இந்துத் துவா பாசிசம் துடைத்தெறியப்பட விழை கிறேன்.

— ஆ.சேக் அலி, சாத்தான்குளம்.

● தன் காலையே நக்கும் மட சங்கராச்சா ரியை அம்பலப்படுத்திய அட்டைப் பட கேலிச்சித்திரம் மிக அருமை. சங்கராச்சாரி யின் பார்ப்பன திமிரையும் தலைவிரித் தாடும் பார்ப்பன ஆதிக்கத்தையும் விளக்கிய தலையங்கக் கட்டுரை, நாம் போராட வேண்டிய அவசியத்தை உணர்த் தியது. சாதாரண ''சோப்'' பில் கூட உலக வங்கியின் ஆதிக்கம் நிலவுவதைச் சிவந்த கண்களுடன் கவனித்து அதிர்ச்சிய டைந்தேன்.

— வேல். தினகரன், சனமங்களம்.

● பாசிச எம்.ஜி.ஆர் ஆட்சியில் தலையெ டுத்த பார்பனியம், பாசிச ஜெயா ஆட்சியில் ஆதிக்கம் செலுத்துமளவுக்கு வளர்ந்து விட்டதையும், சங்கராச்சாரியின் வாய்க் கொழுப்பையும் தலையங்கக் கட்டுரை எடுப்பாக உரைத்தது. தமிழகம், பார்ப்பனி யத்தின் பரிசோதனைக் கூடமாக மாறுமா அல்லது பெரியாரின் மண் என்பதை நிரூ பிக்குமா என்பது இந்துத்துவ பாசிச சக்திக ளுக்கு எதிரான நமது போராட்டத்தைப் பொறுத்தே உள்ளது.

— வீ. சேகர், ஜெயங்கொண்டம்.

● பார்ப்பனிய ஆதிக்கத்துக்கு எதிராகப் போராட வேண்டும் என உணர்வூட்டும் வகையில் பு.ஜ.அமைந்துள்ளது. வாய்க் கொழுப்பேறிய சங்கராச்சாரிக்கு தமிழக மக்கள் மொட்டையடித்து செம்புள்ளி கரும் புள்ளி குத்தி கழுதை மேல் ஏற்றும் காலம் வெகு தொலைவில் இல்லை.

— எம்.எம்.முரளி, அம்மையப்பன்.

● டிசம்பர் மாத இதழில் பார்ப்பனிய சனா தன தர்மம்தான் இந்துத்துவ முகமூடி போட்டுக் கொண்டு வருகிறது என்பதைப் பற்றியும் சங்கராச்சாரியையும் அம்பலப் படுத்தி எழுதியிருந்தீர்கள். இப்போது இந்த பார்ப்பனிய இந்துத்துவாவை அம்பலப் படுத்தி முறியடிக்காவிட்டால், குஜராத்தில் மோடி என்ற கேடி ஆட்சியைப் பிடித்தது போல் தமிழகத்தை உருமாற்றிவிடும் இந்தப் பார்ப்பனிய கும்பல்.

— எம். சசி, பு.மா.இ.மு; சிவகிரி.

● ''சீனா: போலி சோசலிச வேடமும் கலைந்தது'' என்ற கட்டுரை உள்ளூர் போலி கம்யூனிஸ்டுகளிடம் பேசுவதற்கு நன்றாக உள்ளது . ''ஆப்கான் பெட்டகச் சாவுகள்: அமெரிக்காவின் போர் குற்றங் கள்'' எனும் கட்டுரை தொடக்கமுதல் இறுதி வரை ஒவ்வொரு வரியும் அடுத்து என்னவென்று அதிர்ச்சிக்கு உள்ளாக்கு கிறது. அமெரிக்காவின் மேலாதிக்க வெறியை மக்களிடம் அம்பலப்படுத்தும் கட்டுரையாகவும் உள்ளது.

— வாசகர் வட்டம், திருச்சி.

● மகரந்தன் போன்ற கைக்கூலிகளுக்கு பு.ஜ.வின் கட்டுரை விளக்கங்களைப் படித் தாலும் அறிவு வருமா என்பது சந்தேகமே! தொடரட்டும், தோழர் மலர்மன்னனின் பணி.

— கெ. ரமேஷ்,
அண்ணாநகர், மதுரை.

www.padippakam.com

# குஜராத்தில் நடந்தது மதக் கலவரமல்ல மோடி தலைமையில் நடந்த இனப்படுகொலை

## *மக்கள் தீர்ப்பாயத்தின் விசாரணையில் அம்பலமாகும் உண்மைகள்*

''குஜராத்தில் இந்து வெறியர்களும் பா.ஜ.க. அரசாங்கமும் கைகோர்த்துக் கொண்டு முசுலீம்களுக்கு எதிரான இனப்படுகொலையைத் திட்டமிட்டு நடத்தியுள்ளனர். ஏறத்தாழ 2000க்கும் மேற்பட்ட முசுலீம்கள் வெட்டிக் கொல்லப்பட்டு, எரியும் தீயில் வீசியெறியப்பட்டனர். முசுலீம் பெண்கள் மீது பாலியல் வன்முறை ஏவிவிடப்பட்டு, முசுலீம் குடியிருப்புகளும் சொத்துக்களும் சூறையாடப்பட்டன. மிகக் கொடூரமான இந்த இனப்படுகொலையைத் திட்டமிட்டு வழிநடத்திய முதன்மைக் குற்றவாளி, முதல்வர் மோடி. மனித இனத்துக்கே எதிரான மிகக் கொடிய கிரிமினல் குற்றங்களைப் புரிந்துள்ள முதல்வர் மோடியையும் அவரது அமைச்சரவை மற்றும் போலீசு உயரதிகாரிகளையும் இந்தியத் தண்டனைச் சட்டங்களின் கீழும், பயங்கரவாத ''பொடா'' சட்டத்தின் கீழும் கைது செய்து தண்டிக்க வேண்டும், மோடியும் அவரது அமைச்சர்களும் பொது வாழ்வில் பதவிகளில் நீடிக்கவே அருகதையற்றவர்கள். ஏனெனில் அவர்கள் மனித இனத்திற்கே எதிரான பயங்கரவாதக் குற்றவாளிகள்.''

— குஜராத்தில் இனப்படுகொலையைத் திட்டமிட்டு நடத்திய இந்து வெறி பயங்கரவாத ஆட்சியாளர்கள் மீது இப்படி பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளது, மக்கள் தீர்ப்பாயம். (Concerned Citizens Tribunal). குஜராத்தில் கடந்த பிப்ரவரி இறுதியிலிருந்து ஏறத்தாழ ஒருமாத காலத்திற்கு நடந்த இனப்படுகொலைகளைத் தொடர்ந்து பல்வேறு மனித உரிமை – ஜனநாயக உரிமைக்கான அமைப்புகளும் பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் மற்றம் அறிவுத்துறையினர் ஒன்றிணைந்து ''குடிமக்கள் தீர்ப்பாய''த்தை நிறுவினர்.

ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதிகளான வி.ஆர்.கிருஷ்ணய்யர், பி.பி.சாவந்த், ஓய்வு பெற்ற பம்பாய் உயர்நீதி மன்ற நீதிபதியான ஹாஸ்பெட் சுரேஷ், டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகப் பேராசிரியர்களான கன்ஷியாம் ஷா, தனிகா சர்க்கார், திரிபுரா மாநில முன்னாள் போலீசு தலைமை இயக்குநரான டாக்டர் கே.எஸ்.சுப்பிரமணியன், சிவில் உரிமைக் கழக பிரபல வழக்கறிஞரான கே.ஜி.கண்ணபிரான், மக்கள் உரிமை இயக்கச் செயல் வீரரான அருணா ராய் ஆகிய எட்டுபேரைக் கொண்ட இந்த குடிமக்கள் தீர்ப்பாயம், குஜராத்தில் இந்துவெறி பயங்கரவாதம் தலைவிரித்தாடிய 16 மாவட்டங்களில் நேரடி விசாரணை நடத்தி, 1500 சாட்சியங்கள் – 2090 சான்றாவணங்களுடன் கடந்த நவம்பர் 22–ஆம் தேதியன்று மூன்று தொகுதிகளாகத் தனது விசாரணை அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

கோத்ரா சம்பவத்தைத் தொடர்ந்து குஜராத்தில் நடந்த கலவரங்கள், இந்துக்கள் ஆத்திரமடைந்து தன்னெழுச்சியாக நடத்தியவை அல்ல; மாறாக, இவை குஜராத் அரசால் திட்டமிடப்பட்டு, ஆதரிக்கப்பட்டு, ஊக்குவிக்கப்பட்டவைதான் என்று குடிமக்கள் தீர்ப்பாயம் உறுதிபடக் கூறியுள்ளது. மேலும், இது வகுப்புக் கலவரம் அல்ல; வகுப்புக் கலவரம் எனில், இருதரப்புக்குமிடையே மோதல் நடந்திருக்க வேண்டும். ஆனால், சிறுபான்மையினரான முசுலீம்கள் உயிருக்கு அஞ்சி ஓடிக் கொண்டிருந்தனர். இந்து வெறியர்கள் திட்டமிட்டு இனப்படுகொலையைக் கட்டவிழ்த்து விட்டனர். அரசு ஆதரவோடு ஏவிவிடப்பட்டு, வழிநடத்தப்பட்ட மிகக் கொடூரமான தாக்குதலே இது என்று தீர்ப்பாயம் அறுதியிட்டுள்ளது.

குடிமக்கள் தீர்ப்பாயம் கண்டறிந்த உண்மைகளில் சில:

கோத்ராவில் ரயில் பெட்டி எரிப்பு சம்பவம் நடந்த அன்று – பிப்ரவரி 27–ஆம் தேதியன்று மாலையில் முதல்வர் மோடியின் இல்லத்தில் இரகசிய சதித்திட்டம் தீட்டப்பட்டது. முதல்வர் மோடி ஏற்பாடு செய்த இந்தக் கூட்டத்தில் மூன்று பா.ஜ.க. அமைச்சர்களும் அகமதாபாத் நகர போலீசு கமிஷனர், மாநில போலீசு தலைமை இயக்குநர் மற்றும் சில முக்கிய புள்ளிகளும் பங்கேற்றனர். ''கோத்ரா சம்பவத்தைத் தொடர்ந்து இந்துக்களின் எதிர்விளைவுகள் நடக்கும்; அவ்வாறு எதிர்த்தாக்குதல் நடக்கும் போது அதைத் தடுக்கவோ, கட்டுப்படுத்தவோ போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது; கோத்ரா சம்பவத்தை குஜராத் முழுவதும் கொண்டு செல்ல வேண்டும்'' என்று சதிகாரர்கள் இக்கூட்டத்தில் முடிவு செய்தனர். அதனடிப்படையில் நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டன.

கோத்ராவில் ரயில் பெட்டி எரிப்பு நடந்த அதேநாள் இரவில், பாஞ்ச்மகால் மாவட்டத்திலுள்ள லூனாவாடா கிராமத்தில் சங்கப் பரிவாரத்தினர் மற்றுமொரு இரகசியக் கூட்டத்தைக் கூட்டினர். ஏறத்தாழ 50–க்கும் மேற்பட்ட ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங் தளம், விசுவ இந்து பரிசத் மற்றும் பா.ஜ.க.வின் உயர்மட்டத் தலைவர்கள் இதில் பங்கேற்றனர். மாநிலச் சுகாதார அமைச்சர் அசோக் பட், போக்குவரத்து அமைச்சர் பிரபாத்சிங் சவுகான் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில்தான் முசுலீம்களை நரவேட்டையாடுவதற்கான கொலைகாரத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இனப்படுகொலையை நியாயப்படுத்த இந்துக்களிடம் வெறியூட்டுவது

**குஜராத்தில் நடந்த இனப்படுகொலையின் பிரதான குற்றவாளிகள் இந்துவெறி ஆட்சியாளர்கள்தாம்! விசாரணைத் தீர்ப்பு அறிக்கையை வெளியிடும் குடிமக்கள் தீர்ப்பாயக் குழுவினர்.**




படிப்பகம்

www.padippakam.com

முதல் என்னென்ன வழிகளில், உத்திகளில் கொலைகளைக் கட்டவிழ்த்து விடுவது என்பது வரை சதித்திட்டங்கள் இங்குதான் வகுக்கப்பட்டன.

கோத்ராவில் ரயில் பெட்டி தீப்பற்றியதைத் தொடர்ந்து பிப்ரவரி 27 அன்று காலை 8.30 மணியிலிருந்து இரவு 7 மணி வரை கோத்ரா மாவட்ட ஆட்சியரான ஜெயந்தி ரவி, தொலைக்காட்சியிலும் வானொலியிலும் ''இச்சம்பவம் ஒரு விபத்து'' என்றும், ''இது திட்டமிட்ட தாக்குதலே அல்ல'' என்றும் திரும்பத் திரும்பக் கூறினார். ஆனால், இரவு 7.30 மணிக்குப் பிறகு முதல்வர் மோடி, தொலைக்காட்சியில் தோன்றி, இது திட்டமிட்ட சதிச் செயல் என்றும், பாகிஸ்தானின் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ.யின் கைவரிசை என்றும் திட்டமிட்ட பொய்ப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டு வெறியூட்டினார்.

புலனாய்வு நிறுவனங்கள் கோத்ரா சம்பவம் பற்றி ஒரு முடிவுக்கு வரும் முன்னரே முதல்வர் மோடி, பாக். உளவு அமைப்பும் அதன் கைக்கூலிகளான முசுலீம்களும் திட்டமிட்டு நடத்திய தாக்குதல் என்று அறிவித்து ஆத்திரமூட்டினார். அவரது அமைச்சரவை சகாக்கள் பலரும் குறிப்பாக, உள்ளாட்சித் துறை அமைச்சரான கோர்தன் ஜடாபியா, பாகிஸ்தானும் முசுலீம்களுமே கோத்ராவில் திட்டமிட்டு இராம பக்தர்களை எரித்தனர் என்று எவ்வித ஆதாரமுமின்றிப் பிரச்சாரம் செய்து வெறியூட்டினர்.

கோத்ரா சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் உடல்களை வாகனத்தில் ஏற்றி ஊர்வலமாக அகமதாபாத் நகருக்குக் கொண்டு செல்ல முதல்வர் மோடிதான் உத்தரவிட்டார். பிணங்களைக் காட்டி மத வெறியூட்டி அரசியல் ஆதாயமடைவதே அவரது நோக்கமாக இருந்தது. இந்த ஊர்வலத்தில் பா.ஜ.க. அரசின் முக்கிய அமைச்சர்களும் தலைவர்களும் சங்கப் பரிவாரத்தினருடன் சேர்ந்து கொண்டு முசுலீம்களுக்கு எதிராக வெறியூட்டும் முழக்கமிட்டுக் கொண்டு வந்தனர். கோத்ரா சம்பவத்துக்குப் பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்று மக்களிடம் ஆத்திரமூட்டினர். கோத்ரா சம்பவத்தை நாடு முழுவதும் கொண்டு செல்வோம் என்று முதல்வர் மோடி அறிவித்தார். இம்முடிவுக்கேற்ப திட்டமிட்டபடி நடவடிக்கைகளை ஆட்சியாளர்களும் இந்து வெறியர்களும் மேற்கொண்டனர். சட்டமும் மனித உரிமையும் இயற்கை நீதியும் மனிதாபிமானமும் காலில் போட்டு மிதிக்கப்பட்டு இனவெறித் தீ பற்றி எரிந்தது. போலீசாரும் அதிகார வர்க்கத்தினரும் இந்து வெறியர்களின் கூட்டாளிகளாகி நின்றனர்.



தேசிய குற்றவாளிகள்

முதல்வர் மோடிதான் கோத்ரா சம்பவத்தைச் சாக்காக வைத்து குஜராத் முழுவதும் இனப்படுகொலைகளைக் கட்டவிழ்த்து விட்டார். அவர்தான் போலீசாரையும் அதிகார வர்க்கத்தினரையும் செயல்பட விடாமல் தடுத்தவர். ஆஷன் ஜாஃப்ரி என்ற முன்னாள் எம்.பி.யின் இல்லத்தில் அடைக்கலம் புகுந்த அப்பாவி முசுலீம்களோடு, அந்த எம்.பி.யும் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டபோது, அவர்களைப் பாதுகாக்க எந்த உதவியும் செய்ய மறுத்த குரூரமானவர்தான் முதல்வர் மோடி. நிவாரண முகாம்களில் பரிதவித்த முசுலீம்களுக்கு அடிப்படை மனிதாபிமான உதவிகளைக்கூடச் செய்ய மறுத்த வக்கிரமானவர்தான் முதல்வர் மோடி.

மோடிக்குத் துதிபாடிக் கொண்டு மைய அரசின் துணைப் பிரதமரும் உள்துறை அமைச்சருமான அத்வானி, கோத்ரா சம்பவத்தை இசுலாமிய பயங்கரவாதம் என்றும் பாகிஸ்தானின் கைவரிசை என்றும் எவ்வித ஆதாரமுமின்றி குற்றம் சாட்டி ஊதிப் பெருக்கினார். கோத்ராவுக்குப் பிறகு குஜராத்தில் நடந்தவற்றை இந்து வெறியாட்டமாக – இனப்படுகொலையாக அவர் கருதவில்லை. மாறாக, வகுப்புக் கலவரம் என்றே அவர் சித்தரித்தார். இந்து வெறியர்களுக்கு வக்காலத்து வாங்கும் வழக்குரைஞராகவும், அதேநேரத்தில் இந்து வெறியர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கும் நீதிபதியாகவும் அவர் செயல்பட்டார்.

கோத்ரா ரயில்பெட்டி எரிப்பு குறித்த தடயவியல் பரிசோதனை அறிக்கையானது, இது திட்டமிட்ட சதிச் செயல் அல்ல என்ற உண்மையைக் கூறியபோது, உள்துறை அமைச்சர் அத்வானி உடனடியாக அதை நிராகரித்து, உண்மைகளை ஏற்க மறுத்துள்ளார். அதன் மூலம் மைய அரசு இந்துவெறியர்களுக்கு ஆதரவாகவே நிற்கிறது என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார். அவர் சங்கப் பரிவாரங்களின் பிரச்சாரகனாகச் செயல்பட்டுள்ளாரே தவிர, சட்டபூர்வ அரசாங்கத்தின் பிரதிநிதியாக அவர் கடமையாற்றவில்லை.

குஜராத்தின் காந்தி நகர் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் உள்துறை அமைச்சராகவும் இருந்தபோதிலும், இனவெறியாட்டத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அத்வானி விரிவாகச் சுற்றிப் பார்க்கவில்லை. குஜராத்தில் சட்டம் – ஒழுங்கு சீர்குலைந்த நிலையில் உடனடியாக இராணுவத்தை அனுப்பி உரிய நடவடிக்கைகளை அவர் மேற்கொள்ளவில்லை.

நாட்டின் பிரதமரான வாஜ்பாயி, அவரைவிட மிகப்பெரிய குற்றவாளி. குஜராத்தில் இந்துவெறி பயங்கரவாதம் பற்றிப் பரவத் தொடங்கியதும், பிப்ரவரி 28–ஆம் தேதியன்று தனது வெளிநாட்டுப் பயணத்தை ரத்து செய்தார். ஆனாலும், உடனடியாக அவர் அமைச்சரவையைக் கூட்டி ஆலோசிக்கவில்லை. சட்ட விரோத, சமூக விரோத இந்து வெறிக் குண்டர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கக் கோரி குஜராத் முதல்வருக்கு அவர் எந்த உத்தரவும் பிறப்பிக்கவுமில்லை. குஜராத்தில் கொத்துக் கொத்தாக அப்பாவி முசுலீம்கள் கொல்லப்பட்ட நேரத்தில், ஆர்.எஸ்.எஸ்; விசுவ இந்து பரிசத் தலைவர்களுடன் அவர் அயோத்தி விவகாரம் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தார்.

குஜராத்தில் ஆயிரக்கணக்கில் அப்பாவி முசுலீம்கள், பெண்கள் குழந்தைகளுடன் வெட்டிக் கொல்லப்பட்டபோது, சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட மைய அரசின் சட்ட அமைச்சரான அருண் ஜெட்லி கடுகளவும் முயற்சிக்கவில்லை. மாறாக, அவர் முதல்வர் மோடியின் செயல்களை ஆதரித்து தட்டிக் கொடுத்தார். சட்ட ரீதியாக வழங்கப்பட்டுள்ள மனித உரிமைகள் கூட அப்பட்டமாக மீறப்பட்டுள்ளதைக் கண்டு அவர் அதிருப்தியோ ஆத்திரமோ அடையவில்லை. மாறாக, தனது செயலற்ற

www.padippakam.com



பற்றி எரியும் இந்துவெறி பயங்கரவாதத் தீ:
குற்றவாளிகளுக்கு என்ன தண்டனை?

ஆனால், இந்திய ஆட்சியாளர்கள் அதற்கு நேரெதிராகச் செயல்பட்டு குற்றவாளிக் கூண்டில் நிற்கின்றனர். குறிப்பாக, குஜராத் முதல்வர் மோடி மனித இனத்துக்கே எதிரான கொடிய குற்றங்களைப் புரிந்துள்ள முதன்மைக் குற்றவாளியாவர். இவர்கள் பொதுவாழ்வில் பதவியில் நீடிக்கவே அருகதையற்றவர்கள். இவர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று குடிமக்கள் சார்பாக இந்த தீர்ப்பாயம் தீர்ப்பளித்துள்ளது.

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, பாசிச இட்லருடைய நாஜிக் கட்சியின் மனிதகுல விரோத பயங்கரவாதக் குற்றங்களுக்காக நூரம்பர்க்கில் பகிரங்க விசாரணை நடந்ததைப்போல, இந்த மக்கள் தீர்ப்பாயம் குஜராத்தில் நடந்த இந்துவெறி பயங்கரவாதக் கொலைகள் - அட்டூழியங்கள் பற்றி விசாரணை நடத்தி, இந்துவெறியர்கள்தாம் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்துள்ளது. நூரம்பர்க் தீர்ப்புக்குப் பிறகு மக்கள் விரோத நாஜி குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். அந்த வழியில், மக்கள் தீர்ப்பாயத்தின் முடிவுப்படி மக்கள் விரோத இந்துவெறி பயங்கரவாதிகளை உழைக்கும் மக்கள் தண்டிக்க வேண்டியதுதான் இனிபாக்கியிருக்கிறது.

தன்மையின் மூலம், மைய அரசின் இந்துத்துவ கொள்கைகளையே அவர் பிரதிபலித்தார்.

அதேபோல மைய அரசின் ரயில்வே அமைச்சரான நிதிஷ்குமார், ரயில் பெட்டி எரிப்பு நடந்தவுடன் கோத்ராவுக்குச் சென்று பார்வையிட்டாரே தவிர, இச்சம்பவம் குறித்த விசாரணைக்கு அவர் உத்தரவிடவில்லை. ரயிலில் தீப்பிடித்தது எப்படி? ஓடும் ரயிலின் அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்து நிறுத்தியது யார்? இது திட்டமிட்ட சதியா அல்லது விபத்தா? என்ற கேள்விகளுக்கு விடை காண இன்றுவரை அவர் எந்நடவடிக்கையும் எடுக்கவில்லை. இனப்படுகொலைகளால் இரணகளமாகிவிட்ட குஜராத்துக்கு அவர் வருகை தரவுமில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, விசுவ இந்து பரிசத்தின் 'அனைத்துலகச் செயலாளராக' அழைக்கப்படும் பிரவீண் தொகாடியா, இந்துவெறியை வெளிப்படையாகவே கக்கியதோடு, இனப்படுகொலைகளைத் தலைமையேற்று வழிநடத்திய மிகக் கொடிய குற்றவாளி. இந்து வெறியர்களால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த முசுலீம்களுக்கு எவ்வித மருத்துவ உதவியும் செய்யக்கூடாது என்று தனது மருத்துவமனை ஊழியர்களுக்கு உத்தரவிட்ட, கிஞ்சித்தும் மனிதாபிமானமற்ற கொடுங்கோலன்தான் அவர்.

தொகுப்பாகக் கூறினால், கோத்ரா சம்பவத்துக்குப் பின்னர் குஜராத்தில் நடந்தவை வகுப்புக் கலவரமல்ல; இனப்படுகொலை! அது அரசாங்கத்தால் ஏவிவிடப்பட்டு வழிநடத்தப்பட்ட, நன்கு திட்டமிடப்பட்ட இந்துவெறி பயங்கரவாதத் தாக்குதல். இனப்படுகொலைகளைத் தடுக்கவும் இனவெறியர்களைத் தண்டிக்கவும் சட்டமியற்றுவதை வலியுறுத்தி அனைத்துலக அரங்கில் கையெழுத்திட்டுள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

● மனோகரன்

## போலீசு – சங்கப் பரிவாரக் கூட்டணி

குஜராத் கலவரத்துக்கு முன்னும் பின்னும் போலீசார் ஒரு தலைப்பட்சமாகவும் இந்து வெறியர்களின் கூட்டாளிகளாகவுமே செயல்பட்டனர். உயர் பதவியிலுள்ள பல போலீசு அதிகாரிகள் அரசியல் ரீதியாகவும் சித்தாந்த ரீதியாகவும் காவிமயப்படுத்தப்பட்டவர்களாகவே இருந்தனர். குறிப்பாக, குஜராத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததும் இந்துவெறியர்களின் விசுவாசக் கூட்டாளிகளான போலீசார் உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டனர். சில உதாரணங்கள்:

அகமதாபாத் நகர குற்றப்பிரிவு போலீசு தலைமை ஆய்வாளரான வி..பி.ராவல், பாபர் மசூதியை இடிக்கச் சென்ற கரசேவகர்களில் ஒருவன். தான் கடப்பாரையுடன் மசூதியை இடிப்பதைப் புகைப்படமெடுத்துக் கொண்டு அதைப் பெருமையாகக் காட்டித்திரிந்தவன். இதன் காரணமாகவே பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததும் ராவல் உயர் பதவியில் அமர்த்தப்பட்டார்.

போலீசு துறையின் 4,5,6-வது மண்டலங்களின் தலைமை அதிகாரிகளான மகாடியா, சவாணி, ஜெபாலியா ஆகியோர் விசுவ இந்து பரிசத்தின் தலைவரான பிரவீண் தொகாடியாவின் விசுவாசக் கூட்டாளிகளாவர். வி.இ.ப.வின் ஏஜெண்டுகளாகச் செயல்பட்டவர்கள்.

போலீசு துறையின் 3-வது மண்டலத் தலைமை அதிகாரியான பி.பி.கோண்டியாவுக்கு கடந்த தேர்தலில் போட்டியிட பா.ஜ.க. தேர்தல் டிக்கெட் கொடுத்தது. (காங்கிரசு எம்.எல்.ஏ.வான அவரது தந்தை தடுத்ததால் கோண்டியா தேர்தலில் நிற்கவில்லை)

போலீசு துறையின் முதலாவது மண்டலத் தலைமை அதிகாரியான பார்ஹி என்பவர், கோண்டியாவின் மைத்துனராவார். குஜராத் கலவரத்தின் போது, இந்துவெறிக் கொலைகாரன் ஹரேன் பாண்டியா என்பவருடன் சேர்ந்து கொண்டு இவர் போலீசு வாகனத்தில் ரோந்து சுற்றினார்.

ஹிம்மத் நகர் போலீசு தலைமைக் கண்காணிப்பாளரான என்.டி. சோலங்கியின் தந்தை, விசுவ இந்து பரிசத்தின் முக்கியத் தலைவராவார்.

–இவ்வாறு அரசு எந்திரத்தின் துணையோடு இந்துவெறியர்களும் இந்துவெறிபோலீசு அதிகாரிகளும் கலவரத் தீயைப் பற்றி எரியச் செய்தனர்.

*("குடிமக்கள் தீர்ப்பாயம்" வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து)*


படிப்பகம்

www.padippakam.com

## ஜெயா – கிருஷ்ணா

# காவிரி பிரச்சினையில் பகையாளிகள் நாகப்பா கொலையில் பங்காளிகள்

கடத்தப்பட்டிருந்த கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவின் சாவு நேர்ந்த விதம் குறித்த வீரப்பனின் கூற்றைத்தான் எல்லைக்கு இருபுறமும் உள்ள பெரும்பாலான மக்கள் நம்புகின்றனர். தான் இடமாறிச் செல்லவிருந்த சமயம் திடீரென்று வந்து துப்பாக்கிச் சண்டையில் இறங்கிய தமிழக அதிரடிப் படைப் போலீசால் நாகப்பா சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது வீரப்பனின் கூற்று. இதை நம்புவதற்கான ஆதாரங்கள் நிறையவே உள்ளன.

நாகப்பாவின் உடல் கிடந்த செங்கடி காட்டுப் பகுதியில் சம்பவ நேரத்தில் கடும் துப்பாக்கிச் சண்டைச் சத்தம் கேட்டதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். நாகப்பாவின் உடல் கிடந்த சுற்று வட்டாரப் பகுதியில் மூன்று இடங்களில் துப்பாக்கிச் சூடுகள் நடந்துள்ளன; சக்தி வாய்ந்த துப்பாக்கியால் சுடப்பட்ட குண்டு நாகப்பாவின் உடலைத் துளைத்துக் கொண்டு வெளியேறி இருக்கிறது; 27 ''ஷெல்''களும், மூன்று சுடப்பட்ட குண்டுகளும் அந்த இடத்தில் சிக்கியுள்ளன. இவை ஏ.கே. 47 வகைத் துப்பாக்கியால் சுடப்பட்டிருக்கின்றன. அரசு அதிரடிப்படையிடம் மட்டுமே இந்த வகைத் துப்பாக்கிகள் உள்ளன. வீரப்பன் கும்பலிடம் கிடையாது.

நடந்த சம்பவத்தை முழுவதுமாகக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, வீரப்பன் கும்பலை அடியோடு கொன்று விடுவதற்குத்தான் இரு மாநில அரசுகளும், மத்திய அரசும் அதிக அக்கறை காட்டுகின்றன. இதை ஜெயலலிதா பகிரங்கமாகவே கூறுகிறார்.

நடிகர் ராஜ்குமாரை வீரப்பன் கடத்தி வைத்திருந்தபோது, அவரை மீட்பதில் கர்நாடக காங்கிரசு முதல்வர் காட்டிய அக்கறையில் துளிகூட நாகப்பாவை மீட்பதற்குக் காட்டவில்லை என்பது நாடறிந்த உண்மை. நடிகர் ராஜ்குமாரை மீட்பதற்குப் பேருதவி செய்த தூதர்கள் மீது பல்வேறு பொய் வழக்குகள் போட்டுச் சித்திரவதை செய்து சிறையிலடைத்தன மாநில அரசுகள். இதன் காரணமாகவே நாகப்பா விவகாரத்தில் தலையிட யாருமே முன்வரவில்லை.

நாகப்பாவைப் பலியிடுவது என்று இரு மாநில அரசுகளும் ஏற்கனவே முடிவு செய்துவிட்டன. இதையே வெவ்வேறு அணுகுமுறையைக் கொண்டு செய்து வந்தன. அதிரடித் தாக்குதல் நடத்தி வீரப்பன் கும்பலைக் கொன்று நாகப்பாவை மீட்பது என்பதுதான் ஜெயலலிதா அறிவித்த உத்தி. இரண்டு ஆண்டுகளாக அதிரடிப் படையை ஏவித் தீவிரமாக முயன்றும் வீரப்பனை நெருங்க முடியவில்லை. இவர்கள் அதிரடி நடவடிக்கைகள் மூலம் நாகப்பாவை மீட்பதாகக் கூறுவது இருட்டில் குருட்டுப் பூனை விட்டத்திற்கு தாவும் முயற்சியாக அமையும் எனத் தெரிந்தும் இந்தச் செயலில் ஜெயா-தேவாரம் கும்பல் ஈடுபட்டது. தூதர்களை அனுப்பி நாகப்பாவை மீட்கும் எந்த முயற்சியையும் சீர்குலைக்கும் வேலையை தொடர்ந்து செய்து வந்தது. வீரப்பன் கோரியபடி கொளத்தூர் மணியைக் காட்டுக்குள் அனுப்பினால், அவர் மீது அதிரடித் தாக்குதல் நடத்துவதாக மிரட்டி, தயாரிப்பும் செய்து வந்தது.

நாகப்பா பணயக் கைதியாக இருந்த போது அவரை மீட்பதிலும், அவரது சாவுக்குப் பிறகு உண்மையை அறிவதிலும் வேண்டாத வெறுப்போடுதான் செயல்பட்டது கர்நாடக அரசு. அதற்கும் நாகப்பாவின் குடும்பம், ஆட்சியினர் மற்றும் சாதியினரின் நிர்பந்தம்தான் காரணம். சாவுச் செய்தி கேட்ட பின்பும் நாகப்பாவின் உடலை மீட்கவும், தடயங்களை மீட்கவும் அரசு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இந்தச் சம்பவத்தை வைத்து பாரதிய ஜனதாக் கட்சி அரசியல் ஆதாயம் தேடுவதற்கு நடத்தும் ஆரவாரங்களை எதிர்கொள்வதற்காக மட்டுமே கண்துடைப்புக்காக நீதிவிசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறது, கர்நாடக அரசு.

இப்போது, எப்படியாவது வீரப்பன் கும்பலை ஒழித்துக்கட்டுவதில் மாநில–மத்திய அரசுகள் அதீத முனைப்புக் காட்டுகின்றன. காரணம், வீரப்பனுடன் கூட்டுச் சேர்ந்துள்ள கடத்தல் தொழிலதிபர்கள், ஓட்டுக்கட்சிப் பிரமுகர்கள் பற்றி சாட்சியம் - ஆதாரங்களை அழித்துவிடுவது இவர்களின் முக்கிய அக்கறைக்குரியதாக உள்ளது.

காட்டு விலங்குகளைச் சட்டவிரோதமாக வேட்டையாடுவதில் தனது கிரிமினல் வாழ்வைத் தொடங்கிய வீரப்பன், யானைகளை

தொடர்ச்சி 22-ஆம் பக்கம்





செங்கடி காட்டுப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட நாகப்பாவின் (உள்படம்) சடலம்.

www.padippakam.com

# சட்டத்தின் முன் அனைவரும் சமமில்லை

கர்நாடக மாநிலத்தில் மைசூரை ஒட்டி, ஹன்சூர் நகருக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஓர் உல்லாச விடுதிக்குள், ஒரு மதிய நேரத்தில் மூன்று ஆண்களும், நான்கு பெண்களும் அடங்கிய கும்பலொன்று தள்ளாடி தள்ளாடி நுழைந்தது. தங்களுக்குப் பிடித்தமான உணவு வகைகளைக் கொண்டுவரச் சொல்லிவிட்டு உட்கார்ந்த அவர்கள், ஒருவருக்கொருவர் ஆபாசமாகச் சீண்டி விளையாடத் தொடங்கினர். இதைப் பார்த்துச் சுற்றி இருந்தவர்கள் முகம் சுளித்ததையெல்லாம் அந்தக் கும்பல் கண்டு கொள்ளவேயில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த ஒருவர், ஒரு கட்டத்தில் இந்த ஆபாச விளையாட்டைப் பற்றி போலீசுக்குத் தகவல் கொடுத்தார். போலீசும் லத்தியைச் சுழற்றிக் கொண்டு விடுதிக்குள் நுழைந்தது. அதிகார மிடுக்கோடு அந்தக் கும்பலிடம் விசாரணையைத் தொடங்கியது. அந்தக் கும்பல், தாங்கள் இன்னாரென்று சொன்னவுடனேயே, போலீசு வந்த சுவடே தெரியாமல் திரும்பப் போய்விட்டது.

இந்தச் சம்பவம் நடந்து முடிந்து இரண்டு மாதங்கள் உருண்டோடி விட்டன. ஆனாலும், பொது இடத்தில் ஆபாசமாக நடந்துகொண்ட அந்தக் கும்பலின் மீது இதுநாள் வரையில் ஒரு வழக்கோ, முறையான விசாரணையோ நடைபெறவில்லை. ஏனென்றால், அந்தக் கும்பலில் வந்திருந்த மூன்று ஆண்களும் கர்நாடக மாநில உயர்நீதி மன்ற நீதிபதிகள் எனக் கூறப்படுகிறது.

இது போன்றதொரு சம்பவம் தமிழகத்திலும் சமீபத்தில் நடந்தது. அருப்புக்கோட்டையைச் சேர்ந்த தொழிலதிபர்களான ஜெயவிலாஸ் நிறுவனத்தினர் 30 கோடி செலவில் புதிய காற்றாலைகளைத் தொடங்கியிருப்பதைக் கொண்டாடும் விதமாக, கன்னியாகுமரியில் உள்ள ''ஸீ வியூ'' விடுதியில் உல்லாசக் கேளிக்கை விருந்துக்கு ஏற்பாடு செய்தனர். மது, மாது, பாட்டுக் கச்சேரி எனக் களை கட்டிய இந்த விருந்தில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியக் கண்காணிப்பு அதிகாரி ஜெகன் சேஷாத்திரி, தமிழக உயர் நீதி மன்ற நீதிபதிகள் இருவர், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த நீதிபதி ஒருவர், தமிழகத் தேர்தல் ஆணையத்தின் உயர் அதிகாரி ஒருவர் எனப் பலதரப்பட்ட பெரிய மனிதர்கள் கலந்து கொண்டனர்.

நள்ளிரவு தாண்டியும் நடந்த பாட்டுக் கச்சேரியின் அலறலைத் தாங்க முடியாத யாரோ ஒருவர், இது பற்றி போலீசிடம் புகார் சொல்ல, விடுதிக்கு எதிரே இருக்கும் போலீசு நிலையத்தைச் சேர்ந்த துணை ஆய்வாளர் ரமேஷ் பாபு, தலைமைக் காவலர் ஜேசுதாசு ஆகிய இருவரும் விடுதிக்குள் புகுந்தனர். விருந்துக்கு இடைஞ்சலாக விசாரணை நடத்த வந்த அந்த போலீசாரைப் பார்த்து ஆத்திரமடைந்த அந்தப் பெரிய மனிதர்கள், இரண்டு போலீசாரையும் நையப் புடைத்ததோடு, ஜேசுதாசை விடுதி மாடியில் இருந்து தள்ளிக் கொலை செய்யவும் முயன்றனர்.

உயிர் பிழைத்தால் போதும் எனத் திரும்பி ஓடிவந்துவிட்ட இரண்டு போலீசாரும், இந்தத் தாக்குதல் பற்றி உயர் போலீசு அதிகாரிகளுக்குச் சொல்ல, அவர்கள் உத்தரவுப்படி, போலீசைத் தாக்கியவர்களை வளைத்துப் பிடிக்க ஒரு போலீசு படை புறப்பட்டுப் போனது. சிறிது நேரத்திலேயே விருந்தில் கலந்து கொண்டவர்கள் யார்யாரென்று விவரம் தெரிய வர, புலியாகப் புறப்பட்ட போலீசு படை, பூனையாகத் திரும்பி வந்தது.

குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாத கதையாக, விருந்தில் கலந்து கொண்ட அதிகாரிகள் அல்லாத ஐந்து பேரின் மீது உப்புக்குச் சப்பாணியாக ஒரு வழக்கைப் போட்டு, அவர்களைப் போலீசார் கைது செய்தனர்; பின்னர் போலீசாரே, கைது செய்யப்பட்டவர்களை ராஜ மரியாதையோடு பிணையிலும் வெளியே அனுப்பி விட்டனர்.

**நீதிபதிகள், உயர் அதிகாரிகளால் தாக்கப்பட்ட துணை ஆய்வாளர் ரமேஷ் பாபு.**



கோவையில் செல்வராசு என்ற போலீசுக்காரனைக் கொன்ற வழக்கில், நான்கு முசுலீம்களுக்கு மரண தண்டனை அளிக்கப்படுகிறது. கடமையைச் செய்ய விடாமல் போலீசைத் தடுப்பவர்களுக்கு இது ஒரு எச்சரிக்கை என்ற தொனியில், 'சத்திய ஆவேசத்தோடு' தீர்ப்பளிக்கிறார், நீதிபதி. ஆனால், கன்னியாகுமரியிலோ, கடமையைச் செய்ய விடாமல் போலீசைத் தடுத்ததோடு, அவர்களைக் கொலைவெறி கொண்டு தாக்கிய பெரிய மனிதர்கள் அரைநொடிப் பொழுதைக் கூடச் சிறையில் கழிக்கவில்லை.

பணக்காரக் கும்பல் பணத்தை வீசியெறிந்து சட்டத்தை வளைத்து, அதனின் பிடியில் இருந்து தப்பித்து விடுகிறதென்றால், அதிகார வர்க்கத்தின் மீதோ அச்சட்டம் பாயவே மறுக்கிறது. தவறு செய்த அல்லது குற்றம் சாட்டப்பட்ட அதிகாரியை, அவனது சக அதிகாரிகளே காப்பாற்றுவது ஒருபுறமிருக்க, உயர் அதிகார வர்க்கத்தின் மீது எந்தவொரு குற்றவியல் சட்டமும் உடனே பாய்ந்துவிடாதபடி தடுக்க, அவர்களுக்குச் சட்டபூர்வ பாதுகாப்பு வளையம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஓர் இந்தியக் குடிமகன் பொது இடத்தில் ஆபாசமாக நடந்து கொண்டாலோ அல்லது கொலைவெறியோடு இன்னொருவரைத் தாக்கினாலோ உடனடியாக அவர் மீது போலீசில் புகார் கொடுக்கலாம்; சிறையில் தள்ளலாம்; வழக்கு நடத்தலாம். இந்தச் சட்ட நடைமுறை அதிகார வர்க்கத்துக்குப் பொருந்தாது. ''சட்டத்தின் முன் அனைவரும் சமம்'' என்ற ஜனநாயகத் தத்துவம், அதிகார வர்க்கத்தின் முன் செல்லாக் காசு.

கர்நாடகாவிலும், தமிழகத்திலும் நடந்துள்ள சம்பவங்களில் சம்பந்தப்பட்டுள்ள உயர்நீதி மன்ற நீதிபதிகள் மீது வழக்குத் தொடர வேண்டுமானால், உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி மற்றும் குடியரசுத் தலைவரிடமிருந்து அனுமதி பெற்றாக வேண்டும். ஐ.பி.எஸ் அதிகாரி மீது


படிப்பகம்

வழக்குத் தொடர வேண்டுமென்றால், அவரின் உயர் அதிகாரியிடமிருந்தோ, அரசிடமிருந்தோ அனுமதி பெற்றாக வேண்டும். எனவே, இந்த இரண்டு வழக்குகளிலும் விசாரிக்க வந்த போலீசார் கடமை தவறாமல் நடந்து கொண்டிருந்தால் கூட, இந்தக் குற்றங்களில் சம்மந்தப்பட்டுள்ள அதிகாரிகள் மீது உடனே வழக்குப் பதிவு செய்ய முடியாது.

அதிகாரிகள், மன எழுச்சியோடு தங்களின் கடமையைச் சரிவர நிறைவேற்றுவதற்குத்தான் இச்சட்டபூர்வ பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதாக அரசு கூறுகிறது. ஆனால், அதிகார வர்க்கமோ இச்சட்டபூர்வ பாதுகாப்பைப் பயன்படுத்திக் கொண்டுதான் எல்லாவிதமான ஊழல் முறைகேடுகளிலும் கிரிமினல் குற்றங்களிலும் சளைக்காமல் ஈடுபட்டு வருகிறது. பயங்கரவாதிகள் வேட்டை நடக்கும் மாநிலங்களில் கொலை – பாலியல் வன்புணர்ச்சி ஆகிய கிரிமினல் குற்றங்களில் ஈடுபடும் போலீசு, இராணுவத்தினர் மீது வழக்கே தொடரமுடியாத படி பாதுகாப்பு அளிக்கும் சிறப்புச் சட்டங்கள் கூட உள்ளன.

சுருக்கமாகச் சொன்னால், சட்டத்தின் ஆட்சியின் வில்லனே அதிகார வர்க்கம்தான். இந்த வில்லன் கூட்டத்துக்குள்ளேயே வில்லாதி வில்லனாக இருப்பது நீதிபதிகள்தான் என்பதை கர்நாடகாவில் நடந்த சம்பவம் புட்டு வைக்கிறது.

மைசூர் விடுதியில் நடந்த ஆபாசக் கூத்தை விசாரித்த கர்நாடக போலீசார், ''இப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை, இது பத்திரிகைகள் கிளப்பிவிட்ட வதந்தி'' எனக் கூறி, நீதிமன்றத்தின் புனிதத்தைக் காக்க முயற்சித்தனர். ஆனால், போலீசின் விசாரணையை கர்நாடக மாநில உயர்நீதி மன்ற வழக்கறிஞர்களே ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, மையப் புலனாய்வுத் துறை விசாரிக்க வேண்டும் எனக் கோரினர்.

எத்தனையோ வழக்குகளில், 'பாரபட்சமற்ற' முறையில் விசாரணை நடைபெற வேண்டும் என்பதற்காக, அவ்வழக்குகளை சி.பி.ஐ விசாரிக்க நீதிமன்றங்கள் உத்தரவிட்டுள்ளன. ஆனால், கர்நாடக மாநில உயர்நீதி மன்றம், தனது மூன்று நீதிபதிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை, சி.பி.ஐ போன்ற மூன்றாவது உறுப்பு விசாரிக்க மறுத்துவிட்டது. அதே சமயம், உயர்நீதி மன்ற அதிகாரிகளை அனுப்பி விசாரணை நடத்தியது. ஆனால், அவ்விசாரணையின் முடிவுகளை வெளியிடவில்லை.

இதனிடையே, கர்நாடக மாநில உயர்நீதி மன்றத்தைச் சேர்ந்த மூன்று நீதிபதிகள் வெவ்வேறு மாநிலங்களுக்கு மாற்றப்பட்டனர். கர்நாடகாவில் இருந்து அசாமுக்கு மாற்றப்பட்ட நீதிபதியை எதிர்த்து அம்மாநில வழக்கறிஞர்கள் போராட்டத்தில் குதித்தனர். மாற்றப்பட்ட நீதிபதிகள்தான் ஆபாசக் கூத்தடித்தவர்களோ என்ற சந்தேகம் பரவலாக எழுந்தது.

**விமர்சனம் என்ற ஜனநாயக உரிமையை மறுக்கும் நீதிமன்றம், ஜனநாயகத்தின் தூணாகக் கூறப்படுவதுதான் வேடிக்கையானது.**

இதனால் ஆத்திரமடைந்த உயர்நீதி மன்றம் மைசூர் ஆபாசக் கூத்து செய்தியை வெளியிட்ட 14 பத்திரிகைகள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுத்தது. ''உறுதிப்படுத்தப்படாத செய்தியினை வெளியிட்டதன் மூலம் இப்பத்திரிகைகள் நீதித்துறையின் மதிப்பைக் கெடுத்துவிட்டதாகவும், கர்நாடக உயர்நீதி மன்றத்தின் மீது அவதூறுகளை அள்ளிவீசியிருப்பதாகவும்'' குற்றஞ் சுமத்தியிருக்கிறது.

இவ்வழக்கின் மூலம் குற்றஞ் சுமத்திய பத்திரிகைகள் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டு விட்டன. ''பொடா'' சட்டத்தின் கீழ் குற்றஞ் சாட்டப்பட்டவர் தன்னை நிரபராதி என நிரூபித்துக் கொள்ள வேண்டியதைப் போல, இப்பத்திரிகைகள் நடந்த சம்பவம் உண்மை என நிரூபித்தாக வேண்டும்.

மேலும், எந்த நீதிமன்றம் பத்திரிகைகள் மீது இவ்வழக்கை தொடுத்ததோ, அதே நீதிமன்றம் தான் இவ்வழக்கை விசாரிக்கப் போகிறது. அதாவது, குற்றஞ் சுமத்தியவர்களே நீதிபதிகளாகவும் இருப்பார்கள். எனவே, ''தவறான செய்தியை வெளியிட்டதாகக் கூறி மன்னிப்புக் கேட்பதைத் தவிர'' பத்திரிகைகளுக்கு வேறுவழியில்லை. சந்தேகப்பட்டுப் பிடித்தவனைச் சித்திரவதை செய்து குற்றத்தை ஒப்புக் கொள்ளச் செய்யும் போலீசு பாணியில், கர்நாடக உயர்நீதி மன்றம் இறங்கியிருக்கிறது. பத்திரிகை சுதந்திரத்தின் குரல்வளையை நெறிப்பதன் மூலம் தனது புனிதத்தைப் பாதுகாத்துக் கொள்ளத் துடிக்கிறது.

நீதிபதிகள் நியமனத்திலேயே ஊழல் புழுத்து நாறும்பொழுது, நீதி வழங்கும் இடத்தில் இருக்கும் நீதிபதிகள் புனிதமானவர்கள்; அவர்கள் மீது குற்றஞ்சுமத்தக் கூடாது எனக் கூறுவது அபத்தமானது. ''இந்தியாவிலுள்ள நீதிபதிகளுள் 20 சத வீத நீதிபதிகள் ஊழல் பேர்வழிகள்'' என முன்னாள் உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி பருச்சா கூறியிருக்கிறார். ''நீதிபதிகளின் நடத்தையைப் பற்றி விசாரிக்க சுதந்திரமான கமிசன் தேவை'' என்கிறார் இன்னொரு முன்னாள் நீதிபதி பகவதி. இதை இவர்கள் சொல்லலாம்; ஆனால், பத்திரிகைகள் சொல்லக் கூடாது எனப் பாய்கிறது கர்நாடக உயர்நீதி மன்றம்.

நாடாளுமன்றம், சட்டமன்றம், ஓட்டுக்கட்சிகள், போலீசு இவை அனைத்தும் மக்களிடம் அம்பலப்பட்டுப் போய்விட்ட நிலையில், நாடாளுமன்ற ஜனநாயகம் நீதிமன்றத்தின் புனிதத்தைக் காட்டிதான் தனது கடைசி காலத்தை ஓட்டுகிறது. அதனால், கடவுளின் சக்தியைக் கேள்விக்கிடமின்றி நம்புவதைப் போல, நீதிமன்றத்தையும் நம்ப வேண்டும் என ஆளுங்கும்பல் எதிர்பார்க்கிறது.

மத அடிப்படைவாதிகள் கட்டளைகள் போடுவதைப் போல, ''நீதித்துறையை விமர்சிக்கக் கூடாது; நீதிபதிகளை விமர்சிக்கக் கூடாது; நீதிபதிகளுக்கு உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது'' எனக் கட்டளைகள் போடப்படுகின்றன. நீதித்துறையை விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதாக வைத்திருப்பதற்காகப் போடப்பட்ட இந்தக் கட்டளைகள், இப்பொழுது, ''நீதிபதிகளின் தீர்ப்புகளைக் கூட விமர்சிக்கக் கூடாது'' எனுமளவுக்குப் போய், நீதித்துறை பயங்கரவாதமாக மாறிவிட்டது.

நர்மதா அணை குறித்து உச்சநீதி மன்றத் தீர்ப்பை விமர்சித்த எழுத்தாளர் அருந்ததி ராயும், நாவரசு கொலை வழக்கில் ஜான் டேவிட்டை விடுதலை செய்த சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பை விமர்சித்த சென்னையைச் சேர்ந்த சமூக சேவகர் ஒருவரும் இந்த நீதித்துறை பயங்கரவாதத்தால் தண்டிக்கப்பட்டார்கள்.

''நான் யாரையும் விமர்சிப்பேன்; ஆனால், என்னை யாரும் விமர்சிக்கக் கூடாது'' என்பது ஜனநாயகத்தை மறுக்கும் பாசிசப் போக்கு. இப்படிபட்ட பாசிச நிறுவனமான நீதிமன்றம், ஜனநாயகத்தைத் தாங்கி நிற்கும் தூணாகக் கூறப்படுவதுதான் வேடிக்கையானது!

● அழகு

www.padippakam.com

# ஓட்டுக்கு மக்கள்! உத்தரவுக்கு உலக வங்கியா?

தமிழ்நாட்டு மக்கள் மீது அடுத்தக் கட்டப் பொருளாதாரத் தாக்குதலுக்குத் தயாராகிவிட்டது, பார்ப்பன பாசிச ஜெயலலிதா அரசு.

'இலவச' மின்சாரம் ரத்து உட்பட மின் கட்டணம் மீண்டும் ஒருமுறை கிடுகிடுவென உயர்த்தப்படும்.

கொள்ளை இலாபம் தரும் பேருந்து வழித்தடங்கள் தனியாருக்கு விற்கப்படும்.

குடிநீர், பாசனநீர்க் கட்டணம் பெருமளவு உயர்த்தப்படும்.

குடிசை மாற்றுத் திட்ட வீடுகள், வீட்டு வசதி வாரிய வீடுகள் மற்றும் நகராட்சி வணிக கட்டடங்களுக்கான வாடகை பல மடங்கு உயர்த்தப்பட்டு, கட்டாய வசூல் அமலாக்கப்படும்.

அரசுத் துறைகள், போக்குவரத்துக் கழகங்கள், மின்சார வாரியம் போன்ற பல துறைகளிலும் பல்லாயிரம் ஊழியர்களின் வேலை பறிக்கப்படும். இன்னும் மக்கள் மீது பல கோடி ரூபாய் சுமை ஏற்றுவதற்கும், பல ஆயிரம் பேரின் வேலைகளைப் பறிப்பதற்குமான வழிகள் ஆராயப்பட்டு வருகின்றன.

ஆனால், இந்தத் தாக்குதல்கள் பொருளாதார வகைப்பட்டதாக மட்டும் இருக்காது. தொடர்ந்து அரசின் ரௌடிப் பிள்ளைகளாக ஊட்டி வளர்க்கப்படும் போலீசும், ஆளும் கட்சியின் கிரிமினல் குண்டர்களும் ஏவிவிடப்பட்டு, பல்வேறு மக்கள் பிரிவினரும், எதிர்க்கட்சியினரும் அடக்கி ஒடுக்கப்படுவர்.

இந்தப் பொருளாதார, அரசியல் தாக்குதல்களுக்குப் பல பொய்யான விளக்கங்கள் கொடுத்து, நியாயப்படுத்த முயன்று வருகிறார், ஜெயலலிதா. இவற்றை எதிர்த்து அறவழியில் போராடும் ஓட்டுக் கட்சிகள்கூட அரை குறை உண்மைகளை மட்டுமே முன் வைத்து வருகின்றனர்.

போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம் நட்டத்தில் இயங்குவதால், 50 சதவீத வழித்தடங்களைத் தனியாருக்கு விற்பதாக அரசு அறிவித்திருக்கிறது. ஆனால், கடந்த ஆண்டு இதே காரணத்தைக் கூறி, போக்குவரத்துக் கட்டணங்களைப் பன்மடங்கு உயர்த்தியது, ஜெயலலிதா அரசு. அதன்பிறகு போக்குவரத்துக் கழகங்கள் கணிசமான அளவு இலாபத்தில் நடப்பதாக அத்துறை மந்திரியே கூறினார்.

இருந்தாலும், போக்குவரத்து தனியார்மயமாக்கப்படுகிறது. அதுவும் கொள்ளை இலாபம் தரும் வழித்தடங்கள் தனியாருக்குத் தாரை வார்க்கப்படுகின்றன. இதன் மூலம் கோடிக்கணக்கில் ஆளுங்கட்சி வசூல் வேட்டை நடத்துகிறது. இந்த வழித்தடங்களில், அரசு போக்குவரத்து நேரங்களை மாற்றியமைத்தும், பேருந்துகளை முடக்கி வைத்தும் தனியாருக்கு வசதி செய்து தரப்படும். பிற வழித்தடங்கள் இலாபகரமாக இல்லை என்கிற காரணத்தை முன்வைத்து, மொத்தமாக அரசுத்துறைப் போக்குவரத்து நிறுத்தப்படும்.

கடந்த ஆண்டு போனசு கேட்டுப் போராடிய தொழிலாளர்களைப் பழி வாங்குவதோடு, ஆளுங்கட்சிக் கொள்ளைக்கும் தனியார்மயமாக்கம் கொண்டு வரப்படுகிறது. அதேசமயம், ''அனைத்துத் தொழில் - சேவைத் துறைகளிலும் இருந்து அரசு விலகிக் கொள்ள வேண்டும்'' என்ற உலக வங்கி உத்திரவை அமலாக்கவும் பார்ப்பன பாசிச ஜெயலலிதா இவ்வாறு செய்கிறார்.

மேலும், போக்குவரத்துத் துறையைத் தனியாருக்குத் தாரைவார்ப்பதால் 32,000 தொழிலாளர்களுக்கு வேலை பறிக்கப்படும் என்றும் தெரிகிறது. அதோடு தொலைதூரக் கிராமப்புற மக்கள் போக்குவரத்து வசதிகளை இழப்பர்; போக்குவரத்து சாலைப் பராமரிப்புப் பணிகளும் முற்றாக புறக்கணிக்கப்படும்.

இதைவிட மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும் ''சீர்திருத்த'' நடவடிக்கைகளை மின் துறையில் மேற்கொள்வதென்று ஜெயலலிதா அரசு முடிவு செய்துள்ளது. மின் துறை நட்டத்தில் செயல்படுவதாகக் கூறித்தான் கடந்த ஆண்டு பலகோடி ரூபாய் வருவாய் தரும் வகையில் கட்டண உயர்வை ஜெயலலிதா அமல்படுத்தினார். இடையிடையே ஒட்டுமொத்தமாக அறிவிக்காமலேயே, கூடுதல் முன்பணம் வசூலிக்கப்படுகிறது.

இவை போதாதென்று, விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் இரத்து செய்யப்படும்; குடிசைகளுக்கு தரப்படும் ஒரு விளக்கு மின்திட்டம் உட்படச் சாதாரணப் பயனீட்டாளர்களுக்கான மின்கட்டணம் பன்மடங்கு உயர்த்தப்படும். அதே சமயம், பெருந்தொழில்கள், பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கான உயர் அழுத்த மின் கட்டணங்கள் உயர்த்தப்பட மாட்டாது. இதற்கான பரிந்துரைகள் மின் ஒழுங்குமுறை ஆணையத்திற்குத் தரப்பட்டுள்ளன. இது குறித்துப் பொதுமக்கள் கருத்தறியும் கண்துடைப்புக் கூட்டங்களும் நடத்தி முடிக்கப்பட்டுவிட்டது. ஆனால், ஆணையத்தின் இறுதி முடிவு வருவதற்கு முன்பாகவே கட்டண உயர்வு குறித்து ஜெயலலிதா அரசு தீர்மானித்து விட்டது.

மின் கட்டண உயர்வுக்கு ஜெயலலிதா கூறும் காரணங்கள், விளக்கங்கள் அனைத்தும் அப்பட்டமான பொய்கள். உலக வங்கி, ஐ.எம்.எஃப். போன்ற ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் உத்திரவு அடிப்படையில் – உலகமயம், தனியார்மயம், தாராளமயம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கையின்படியும் நாடு முழுவதும் அமலாக்கப்படும் மின் துறை ''சீரமைப்பு''த் திட்டத்தின் ஒரு பகுதிதான் ஜெயலலிதா அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை.

இந்தக் கொள்கையில் முழு உடன்பாடுடைய காங்கிரசும் தி.மு.கவும் இதை மூடிமறைத்து, பொதுவில் ஜெயலலிதா அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஒன்று என்பதாகச் சித்தரிக்கின்றன. உலக வங்கி நிர்ப்பந்தம், மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கை காரணமாக ஜெயலலிதா இப்படிச் செய்வதாகக் கூறும் இரண்டு போலி கம்யூனிஸ்டு கட்சிகளும் வேறோரு உண்மையைப் பூசி மழுப்புகின்றன. ஜெயலலிதாவே இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையை உலக வங்கிக் கூட்டாளியாக இருந்து அமலாக்கக் கூடியவர்தான்; போலி கம்யூனிஸ்டுகள் கூறுவது போல, உலக வங்கி நிர்ப்பந்தம் காரணமாக வேறு வழியின்றி ஜெயலலிதா இப்படிச் செய்யவில்லை.

ஏற்கனவே, ''மதச்சார்பற்ற'' அணி என்று நாடகமாடி ஜெயலலிதாவை ஆட்சிக்குக் கொண்டுவந்த குற்றத்தோடு,



படிப்பகம்

மீண்டும் வாய்ப்புக் கிடைத்தால் அவரோடு சமரசம் செய்து கொள்ளவும்தான் இந்த உண்மையைப் போலி கம்யூனிஸ்டுகள் மூடிமறைக்கிறார்கள்.

1910 மின்சாரச் சட்டம் மற்றும் 1948 மின் வழங்கல் சட்டம் ஆகியவற்றை உலக வங்கி - ஐ.எம்.எஃப். கட்டளைப்படி 2001 மின்சாரத் துறை சீரமைப்புச் சட்டம் மூலம் மத்திய அரசு திருத்தியுள்ளது. இதன்படி தற்போதுள்ள மாநில மின்சார வாரியங்களை மாற்றி மின் உற்பத்தி, மின்சாரம் கொண்டு செல்வது மற்றும் மின் விநியோகம் என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்துப் படிப்படியாகத் தனியார் மற்றும் அந்நியக் கம்பெனிகளுக்குத் தாரைவார்ப்பது அமல்படுத்தப்படும். இந்தச் ''சீரமைப்பை'' நெறிப்படுத்துவதற்காக மாநில மின்சார ஒழுங்கு முறை ஆணையங்கள் அமைக்கப்படும்.

இத்திட்டம் முதன்முதலாக ஒரிசாவில் அமலாக்கப்பட்டு, மின்கட்டணம் கடுமையாக உயர்த்தப்பட்டும் மாநில அரசு பெரும் நட்டத்துக்குள்ளாகி, நெருக்கடியில் சிக்கியது. இருந்தபோதும் உத்திரப் பிரதேசத்திலும், ஆந்திராவிலும் அமலாக்கப்பட்டது. உ.பி.யில் மின்துறை ஊழியர்களும், ஆந்திராவில் பொதுமக்களும் உறுதியாகப் போராடினர்; மூர்க்கத்தனமான ஒடுக்குமுறைக்குப் பலர் பலியானார்கள். இருந்தாலும், மின்துறை சீரமைப்பைத் திணிப்பது என்ற முடிவில் அம்மாநில அரசுகள் பிடிவாதமாக உள்ளன.

''மின்சாரத் துறை சீரமைப்புத்'' திட்டம் படுதோல்வி அடைந்ததற்கு இன்னொரு சான்றாக மராட்டிய மாநிலம் விளங்குகிறது. குறைந்த முதலீடு – மலிவான மின் உற்பத்தித் திட்டங்களை ஏற்று நடத்த இந்தியப் பொதுத்துறை உற்பத்தி நிறுவனங்கள் முன்வந்தபோதும், அவற்றை ஒதுக்கிவிட்டு, அமெரிக்க என்ரான் நிறுவனத்திடம் மின் உற்பத்தி ஒப்பந்தம் போட்டது, மராட்டிய அரசு. பல ஆயிரம் கோடி முதலீட்டில் ஆலை அமைக்கப்பட்டு, மிக உயர்ந்த கட்டணத்துக்கு மின்சாரம் வாங்கி விநியோகிக்கும்படி மராட்டி மாநில மின் வாரியம் நிர்பந்திக்கப்பட்டது. பெரும் நட்டமடைந்த மாநில மின் வாரியம் திவாலானது. ஒப்புக்கொண்டபடி மின்கட்டண நிலுவையும் தண்டத்தொகையும் செலுத்த முடியாமல் போய், உச்சநீதி மன்ற வழக்கிலும் சிக்கிக் கொண்டது. மத்திய அரசு கொடுத்த கடனைப் பெற்று பகுதி நிலுவை செலுத்தப்பட்டது. சர்வதேச வழக்கு மன்றதுக்குப் போவதாக என்ரான் நிறுவனம் மிரட்டியது; ஆனால், என்ரான் நிறுவனத்தின் நிதிமோசடிகள் அம்பலமாகி, அதன் தாய் நிறுவனம் உள்ள அமெரிக்காவிலேயே திவாலாகிப்போனது. ஆனால், இங்குள்ள சிக்கல் – நெருக்கடி குறையவே இல்லை.





**அரசு பேருந்துகளைத் தனியார்மயமாக்கக் கூடாது எனக் கோரி அரசு போக்குவரத்துத் துறை தொழிலாளர் குடும்பங்களும் (மேல்படம்) வேலை நீக்கம் செய்யப்பட்ட சாலைப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை தரக்கோரி அத்தொழிலாளர்களது குடும்பங்களும் நடத்திய உண்ணாவிரதப் போராட்டங்கள். இத்தகைய போராட்டங்களுக்கு ஜெயலலிதா மசிவாரா?**

இந்தக் கசப்பான உண்மைகளை அறிந்திருந்தபோதும், கிடைத்தவரை சுருட்டுவதையே கொள்கையாகக் கொண்ட ஜெயலலிதா, தனக்கேயுரிய பார்ப்பன பாசிசத் திமிரோடு ''மின்துறை சீரமைப்பு''த் திட்டத்தை அமலாக்குகிறார். ஜெயலலிதா புளுகுவதைப்போல விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதோ, மின்கட்டணம் மிகக் குறைவாக விதிக்கப்பட்டிருப்பதோ தமிழ்நாட்டில் மின்வாரியம் நட்டத்தில் இயங்குவதற்கு காரணமல்ல.

ஊழல் மிகுந்த மின்வாரியத்தின் நிர்வாக முறைகேடுகள்; பெரும் ஆலைகளுக்கு நிலுவைக் கட்டணமாக உள்ள பல கோடி ரூபாய் ரத்து செய்வது; ஊழியர்களின் ஒத்துழைப்போடு மின்திருட்டு ஆகியவை முக்கியக் காரணங்களாக உள்ளன. சேலத்தில் உள்ள ஒரு நூற்பாலை மட்டும் பதினோரு கோடி ரூபாய் அளவு மின் திருட்டு செய்திருக்கிறது. இருந்தபோதும், நாட்டிலேயே மின்கட்டண வசூலில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்ட முழுத்திறனோடு இயங்குவதில்லை. மின்சாரம் கொண்டு செல்லு

www.padippakam.com

வதில் உள்ள குறைபாடுகள் காரணமாகவும், 30 சதவீதம் மின் திருட்டினாலும் ஆண்டுக்கு 200 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது.

மாநிலம் முழுவதும் சுமார் 17 இலட்சம் விவசாய மின் இறவை எந்திரங்கள், 9694 பத்து இலட்சம் மின் அளவைகள் பயன்படுத்தி, மொத்த வினியோகத்தில் 25 சதவீதத்தைக் கட்டணமில்லாமல் பெறுவதாக மின்வாரியம் புளுகுகிறது. இதனால் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதுதான் அதன் நட்டத்திற்குக் காரணம் என்கிறது. ஒருநாளுக்கு எட்டு மணிநேரம், ஆண்டுக்கு 365 நாட்களும் இறவை இயந்திரம் இயங்குவதாகக் கணக்கிட்டு இந்த இழப்பு காட்டப்படுகிறது.



விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை ரத்து செய்த ஜெயா, முதலாளிகளுக்குத் தரிசு நிலங்களைப் பட்டா போட்டுக் கொடுக்க அதிகாரிகளோடு நடத்தும் ஆலோசனை.

ஆனால், அறிவிக்கப்படாத மின்வெட்டு காரணமாக ஒரு நாளைக்கு 2 அல்லது 3 மணி நேரமே மின்சாரம் வழங்கப்படுகிறது. 4 அல்லது 5 மாதங்களுக்குக் கிணற்றில் நீர் வற்றிப் போய் விடுகிறது. மேலும், மொத்தத்தில் வினியோகிக்கப்பட்ட மின் அளவில் வசூல் போக உள்ள அனைத்துத் தொகையும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டதாகக் கணக்கிட்டுள்ளனர். மற்றபடி விவசாயிகள் கட்டணமில்லாமல் பயன்படுத்தும் மின்சாரத்தை அளப்பதற்கு மின்வாரியத்திடம் எவ்வித வசதியும் இல்லை.

ஆனால், ஒரு வீடு - ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மின்சாரம், கோவில்களுக்கு இலவசமாக வழங்கப்படும் மின்சாரம், ஓட்டுக் கட்சிகளின் பொது நிகழ்ச்சிக்காகத் திருடப்படும் மின்சாரம் ஆகியவற்றைக் கணக்கிட்டு, மொத்தக் கட்டணமில்லா மின் வழங்கீட்டில் கழித்துப் பார்த்தால் 15 சதவீத மின்சாரமே இலவச மின் திட்டத்தின் கீழ் விவசாயத்துக்கு அளிக்கப்படுகிறது.

இதற்கான தொகை மானியமாக மின்வாரியத்திற்கு அரசிடமிருந்து கொடுக்கப்படுகிறது. ஆகவே, இலவச மின்சாரத் திட்டத்தால்தான் மின்வாரியத்துக்கு நட்டம் ஏற்படுவதாகக் கூறுவது அப்பட்டமான பொய்.

விவசாயிகளுக்கு, மின்சாரத்தோடு, உரம், பூச்சி மருந்து, விதை, ஆதரவு விலை என்று பலவகையிலும் மானியங்கள் வழங்கவேண்டியது அரசின் பொறுப்பாகும். இப்படிச் சொல்வதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. இந்த நாட்டில் மின்சாரம் தொழிலாக மதிக்கப்பட்டு, ஆலைத்தொழில் - சேவைத் தொழில் போன்று உற்பத்தியாளரே விலைநிர்ணயம் செய்து விளைபொருட்களை விற்கமுடியாது. தரைவழி நீர்ப்பாசன வசதிகள் அதிகம் கிடையாது.

விவசாயத்துக்குரிய மானியங்களை வெட்டு, இலவச மின்சாரத்தை ரத்து செய்து; மின் துறையைச் சீரமைப்பு செய் என்று உத்திரவு போடும் உலக வங்கி ஐ.எம்.எஃப்., நிறுவனங்களை ஆளும் ஏகாதிபத்திய நாடுகள், தமது நாட்டு விவசாயத்துக்கு மானியங்களைக் குறைக்க மறுப்பதோடு, போட்டிபோட்டுக் கொண்டு உயர்த்துகின்றன. இதன் மூலம் இந்தியா போன்ற ஏழைநாடுகளின் விவசாயத்தை அடியோடு அழித்து, உணவு முதலிய விவசாய விளைபொருட்களை ஆயுதமாக வைத்து மேலாதிக்கம் செலுத்துவதற்கே அப்படிச் செய்கின்றன. கொள்ளையடிப்பதை மட்டுமே தொழிலாகக் கொண்ட ஜெயலலிதா கும்பலுக்கு வேறு தொழில்கள், குறிப்பாக விவசாயம் அழிவது பற்றி என்ன அக்கறை!

ஜெயலலிதா கும்பல் தானே மின்கட்டணத்தை இவ்வாறு உயர்த்திவிட்டு, பிறகு அதையே காரணமாகக் காட்டி குடிநீர் – பாசன வரியையும் பன்மடங்கு உயர்த்தியுள்ளது. அரசுக்கு நிதி நெருக்கடி என்று கூறி குடிசைமாற்று வாரியம், வீட்டுவசதி வாரியம் வாடகையையும் ஏற்றுகிறது.

இப்படிப்பட்ட ஆட்சியாளர்களிடம் மக்கள் விரோத நடவடிக்கைகளைக் கைவிடும்படி, நிவாரணங்கள் மேற்கொள்ளும்படி கோரிக்கை வைத்து, அறவழிகளில் போராடுவதால் ஒரு பலனுமில்லை. ஆனால், இந்த வரம்பை மீறி அடுத்த அடி எடுத்து வைப்பதற்குக்கூட ஓட்டுக்கட்சிகள் எதுவும் தயாரில்லை. மக்கள் தாமே அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொள்ளும் வகையில் போராடினால்தான் ஜெயலலிதா ஆட்சியின் ஒடுக்குமுறைகளை முறியடிக்க முடியும்.

● ஆர்.கே.

---

**17-ஆம் பக்கத் தொடர்ச்சி**

வேட்டையாடி தந்தங்களையும், சந்தன மரங்களையும் வெட்டிக் கடத்துவது, கருங்கல் பாறைகளை ஏற்றுமதி செய்வதில் தொழிலதிபர்களுடன் கூட்டு என்பது வரை வளர்ந்திருக்கிறான். இந்த வளர்ச்சிப் போக்கில் பல காட்டிலாகா – போலீசுத் துறையைச் சேர்ந்த எதிரிகளைக் கொன்றிருக்கிறான். தனது குற்றத் தொழிலுக்கு உதவியாகப் பணயக் கைதிகளைப் பிடித்து பணம் பறிக்கும் வேலையையும் செய்திருக்கின்றான். ஆனால், இதுவரை பணயக் கைதிகள் யாரையும் கொன்றதில்லை.

தன்னைப் பிடிக்க முயலும் அதிரடிப் படையின் கற்பழிப்பு, கொலை, சித்திரவதை முதலியவற்றைக் காட்டியும், தமிழினக் கோரிக்கைகள் எனச் சில வற்றை முன்வைத்தும் தனது குற்றச் செயல்களை நியாயப்படுத்த எத்தணிக்கிறான். சமூக விரோதிகளாகச் சீரழிந்து விட்ட சில தமிழினத் தீவிரவாதிகள் மட்டுமல்ல; ''மிதவாத'' தமிழினவாதிகள் கூட வீரப்பனின் இந்த நாடகத்திற்குப் பலியாகி அவனுக்கு ஆதரவு நிலை எடுக்கின்றனர்.

இந்தச் சமுதாயத்தில் வேறு பிற கிரிமினல் குற்றக் கும்பல்கள் உருவாகி நீடித்திருப்பதற்கு என்ன காரணங்களோ, அவை வீரப்பன் கும்பலுக்கும் பொருந்தும். இவையெல்லாம் தற்போதைய அரசு பெற்றெடுக்கும் தறுதலைப் பிள்ளைகள்தாம்.

● மாணிக்கவாசகம்


படிப்பகம்

# ஆர்.எஸ்.எஸ்.இன் அடியாளாக தமிழக போலீசு

**பா**பர் மசூதி இடிக்கப்பட்டதைக் கண்டித்தும் ஆர்.எஸ்.எஸ். இந்து மத வெறியர்களை அம்பலப்படுத்தியும் 6.12.2002 அன்று காலை 6 மணிய ளவில் திருத்துறைப்பூண்டி புதிய பேருந்து நிலையத்தில், பு.மா.இ.மு.வைச் சேர்ந்த தோழர்கள் குமாரும், செந்திலும் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்தபொழுது, அவர்களை அப்பகுதி போலீசார் கைது செய்தனர்.

போலீசு நிலைய வாசலிலேயே கையில் தடியுடன் நின்ற ஆய்வாளர் ஜெயராமன், ''ஏன்டா துலுக்கப் பயலுகளா, இந்தியாவுல ஏண்டா இருக்கீங்க! பாகிஸ்தானுக்கு ஓடுங்கடா'' என்று கத்திக் கொண்டே அத்தோழர்களைத் தாக்கினார். மேலும் அவ்விரண்டு தோழர்களையும் நிர்வாணப்படுத்தி சுன்னத் செய்யப்பட்டுள்ளதா என்று சோதித்தார். ''உங்களைத் துலுக்கன்னு நெனச்சிதான்டா அடிச்சுட்டேன்'' என்றார். பக்கத்திலிருந்த போலீசு ''இவனுக பிறப்பிலேயே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. கிராஸ்ஸா (கலப்பு) இருப்பானுவ போல'' என்று ஏளனம் செய்ததோடு, தோழர்களின் சாதி பெயரைக் கேட்டார். தோழர்கள், ''நாங்கள் கம்யூனிஸ்டுகள், எங்களுக்கு சாதி, மதம் இல்லை'' என்றனர். பிறகு போலீசே தோழர்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் என்று எழுதிக் கொண்டது.

தோழர்களை ''இசுலாமியக் கைக் கூலிகள்'' என்றும் ''காசு வாங்கிக் கொண்டு போஸ்டர் ஒட்டுகிறான்'' என்றும் கூறிக் கொண்டே, அவர்கள் வைத்திருந்த பு.ஜ. விற்பனை தொகை ரூ.95-ஐ பிடுங்கி பங்கு போட்டுக் கொண்டனர். பிறகு. ''உங்கள் மீது தீவிரவாதி என்று கேஸ் போட்டால் எதிர்காலமே போய்விடும். 75-வது செக்சன் கேஸ் போடுறேன். பைன் கட்டுறீயா'' என்று மாபெரும் கருணாமூர்த்தியாக நாடகமாடினார் ஆய்வாளர் ஜெயராமன்.

தோழர்களின் மீது வெறித் தாக்குதல் நடத்திய போலீசு, மறுபுறம், ''டிசம்பர் 6 இந்துக்களுக்கு இன்னொரு தீபாவளி'', ''டிசம்பர் 6 இந்து எழுச்சி நாள்'' என்று இந்து முன்னணி ஒட்டிய சுவரொட்டிகளுக்குக் காவல் புரிந்தது.

—தகவல்:
பு.ஜ.தொ.மு., திருத்துறைப்பூண்டி

# ஆண்டவனின் சேவையில் இந்திய அஞ்சல் துறை

**பே**ருந்து கட்டண உயர்வால் உறவினர்களையே மறந்துவிட்ட உழைக்கும் மக்களின் ஒரே தகவல் தொடர்பு ஊடகமாக இருந்த கடிதப் போக்குவரத்தும் கடவுள் போக்குவரத்தாகி விட்டது!

இந்திய தபால்துறையும் திருவிதாங்கூர் தேவஸ்தானமும் இணைந்து 'சுவாமி பிரசாதம்' அனுப்புகிறார்கள்.


இந்திய தபால் துறை
சுவாமி பிரசாதம்
"சுவாமி சரணம்"
ஐயப்ப பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்

மண்டல / மகர விளக்குக்காலங்களில் ஐயப்ப பக்தர்களுக்கு சபரிமலை பிரசாதம் கிடைப்பதற்கு ஓர் அரிய வாய்ப்பினை திருவிதாங்கூர் தேவஸ்தானமும் அஞ்சல் துறையினரும் இணைந்து வழங்குகிறார்கள்.

இத்திட்டத்தின் படி பிரசாதம் தபால் மூலம் பெற விரும்பும் பக்தர்கள் ரூபாய் நூற்றைம்பதை (ரூ. 150/-) நிர்வாக அலுவலர், திருவிதாங்கூர் தேவஸ்தானம், சபரிமலை, பின் – 689713, வழி பத்தினம்திட்டா கேரளா (Executive Officer, Travancore Devasworm Board at Sabarimala, Pin - 689 713) Via Pathanamthitta, Kerala) என்ற முகவரிக்கு பண அஞ்சல் (மணி ஆர்டர்) அனுப்ப வேண்டும். விரைவுத்தபால் வசதியுள்ள அலுவலகங்களிலிருந்து விரைவு மணி ஆர்டர் (Speed Post) ஆகவும் இத்தொகையை அனுப்பலாம். மணி ஆர்டர் படிவத்தின் மேல் பகுதியில் சுவாமி பிரசாதம் என்று குறிப்பிட வேண்டும். பணம் கைப்பற்றிய உடன் கீழ்க்கண்ட பிரசாதங்களை விரைவு பார்சலாக (Express Parcel Post) அஞ்சல் துறை அனுப்பு ஏற்பாடு செய்யும்.

| | | |
|---|---|---|
| 1. | முத்திரை செய்யப்பட்ட டப்பாவில் அடைக்கப்பட்ட 'அரவணைப்பாயசம்' | 250 மி.லி. |
| 2. | காற்றுப்புகாத கவரில் அடைக்கப்பட்ட அப்பம் | 4 அல்லது 5 |
| 3. | ஐயன் சன்னிதி விபூதி, மாளிகைப்புறத்தம்மன் சன்னிதி குங்குமம், மஞ்சள் | 1 பாக்கட் |
| 4. | வாவர் சுவாமி சன்னதி மிளகு | 1 பாக்கட் |
| 5. | சுவாமி ஐயப்பனின் லாமினேட் செய்யப்பட்ட சிறிய படம் | 1 |

மேற்கூறிய முறையில் அனுப்பப்படும் ஒவ்வொரு மணி ஆர்டரிலிருந்தும் ரூபாய் பத்து (ரூ. 10) சபரிமலையில் வரும் பக்தர்கள் [illegible]

முத்திரை செய்யப்பட்ட டப்பாவில் அடைக்கப்பட்ட ''அரவணைப் பாயசம்'', காற்றுப் புகாத கவரில் அடைக்கப் பட்ட அப்பம், விபூதி, குங்குமம், மஞ்சள், மிளகு, ஐயப்பனின் லாமினெட் படம்... என்று பட்டியல் நீளுகிறது. பக்தர்கள் பண அஞ்சல் அனுப்பினால், அனைத்தும் விரைவு பார்சலில் வீடு தேடி வரும் என்று உத்திரவாதம் தருகிறது இந்திய தபால் துறை.

அஞ்சல் துறை சட்டத்தின்படி கசியக் கூடிய திரவப் பொருளை அனுப்ப கூடாது. சட்டம் என்றால் சாமான்னியனுக்கு தான்; சாமிக்குக் கிடையாது என்கிறது இந்திய அஞ்சல்துறை.

வேலை வாய்ப்பு அலுவலகங்களிலிருந்து வரும் கடிதத்தைத் தேர்வு நாள் கழித்து உரியவரிடம் தருவது, நோயாளி போட்ட கடிதத்தை அவர் இறந்தபிறகு உரியவரிடம் தருவது என்று ஆமை வேகத்தில் செயல்படும் தபால் துறை ஆண்டவனின் பிரசாதத்தை மட்டும் விரைவுத் தபாலில் அனுப்புவதாக உத்திரவாதம் தருகிறது.

அரசு அலுவலகங்களைச் சங்கர மடத்தின் உள்ளூர்க் கிளைகளாகவும் அரசு அலுவலர்களை ஜனகல்யாண் உறுப்பினர்களாகவும் சட்டபூர்வமாக்கி வருகிறது பா.ஜ.க. அரசு. மத்திய அரசு நிறுவனங்களுக்கு சமஸ்கிருதப் பெயர்களைச் சூட்டுவது, இந்துமதப் பண்டிகை நாட்களில் பூசை நடத்துவது. இந்து மதக் கடவுள்களின் படங்களை நிரந்தரமாகத் தொங்கவிட்டு வழிபாடு நடத்துவது என்று மூர்க்கமாக இந்து மதவெறியை அரங்கேற்றுகிறது. ஏற்கனவே கல்வியைக் காவிமயமாக்கி மாணவர்களின் பகுத்தறிவைப் பறித்த இக்கும்பல் இப்போது அரசு ஊழியர்களையும் பண்டாரங்களாக்கி இந்து மத வெறியைப் பரப்பும் கரசேவர்களாக்கி வருகிறது. இதுதான் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் மத சார்பற்ற ஆட்சியாம்!

# தோழர் இளங்கோவனுக்கு சிவப்பஞ்சலி



**வி**ருத்தாச்சலம் மனித உரிமை பாதுகாப்பு கவுன்சில் அமைப்பைச் சேர்ந்த தோழர் இளங்கோவன் டிசம்பர் – 1 ஆம் தேதி உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார். 34 வயதேயான தோழர் இளங்கோ புரட்சிகரத் திருமணம் செய்து கொண்டு குடும்பம், சமூகத்தைப் புரட்சிகர அரசியலுக்குத் தயார் படுத்துவதில் முன்னணியில் இருந்தார். தோழர் மறைவுக்குப் பின் நடந்த இறுதி ஊர்வலத்தில் எவ்விதச் சமயச் சடங்குகளும் செய்யக் கூடாதென அவர் மனைவி திருமதி புவனேசுவரி சமரசமின்றி வலியுறுத்திப் போராடியதே இதற்கு எடுத்துக்காட்டாகும். டிசம்பர் – 13 அன்று தோழர் காளியப்பன் தலைமையில், மறைந்த தோழர் இளங்கோவின் படம் திறந்து வைக்கப்பட்டு, இரங்கல் கூட்டம் நடத்தப்பட்டது. தோழர் இளங்கோவின் புரட்சிகர உணர்வைப் பற்றி நின்று செயல்பட தோழர்கள் உறுதியேற்றனர்.

*— மனித உரிமை பாதுகாப்பு கவுன்சில்
விருத்தாச்சலம்.*

www.padippakam.com



## கிரிமினல்களின் கூடாரமாக குஜராத் சட்டமன்றம்

நடந்து முடிந்த குஜராத் மாநிலச் சட்டமன்றத் தேர்தலில் இந்துவெறி பயங்கரவாதிகள் அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்துள்ளனர். இதுவும் போதாதென்று தேர்தலில் வெற்றி பெற்ற எம்.எல்.ஏ.க்களில் 36 பேர், கடைந்தெடுத்த கிரிமினல் பேர்வழிகளாக உள்ளனர். இதில் பா.ஜ.கட்சிதான் முதலிடம் வகிக்கிறது. அக்கட்சியின் எம்.எல்.ஏ.க்களில் 28 பேர் கிரிமினல்கள். இரண்டாம் இடம் வகிக்கும் காங்கிரசுக் கட்சியின் 51 எம்.எல்.ஏ.க்களில் 6 பேர் கிரிமினல்கள். பாவம்! ஐக்கிய ஜனதா தளம் இரண்டு கிரிமினல்களை மட்டுமே சட்டமன்றத்துக்கு அனுப்பி மூன்றாமிடத்தில் உள்ளது.



பா.ஜ. கட்சியின் கோண்டல் தொகுதி எம்.எல்.ஏ.வாகியுள்ள ஜெய்ராஜ்சிங் ஜடேஜா, குண்டுவெடிப்பு, ஆள்கடத்திப் பணம் பறிப்பு, வங்கி மோசடி மற்றும் கொலை வழக்குகளில் சிக்கியுள்ள பிரபல கிரிமினல் பேர்வழியாவார். கோஹா தொகுதி எம்.எல்.ஏ.வான புருசோத்தம் சோலங்கி, மும்பையில் முசுலீம்களுக்கு எதிரான கலவரத்தை முன்னின்று நடத்திய குற்றவாளி. இவர் மீது பல கொலை –கொள்ளை வழக்குகள் உள்ளன. அம்ருத்யா, ஜிட்டு வகேலா, பர்வத் முதலான எம்.எல்.ஏ.க்கள் கலவரம், சூறையாடல், ஆள் கடத்தல், வாக்குச்சாவடி சூறையாடல் முதலானவற்றில் சிக்கியுள்ள கிரிமினல் ''தாதா''க்கள். காங்கிரசுக் கட்சியின் வித்தல்ராடியா என்ற எம்.எல்.ஏ.மீது 7 கிரிமினல் குற்ற வழக்குகளும் 40 இதர வழக்குகளும் உள்ளன. இதில் 14 வழக்குகளில் தனது குற்றங்களை அவர் வழக்கு மன்றத்தில் ஒப்புக் கொண்டுள்ள மிகப் பெரிய 'ஜனநாயகவாதி'!

குஜராத் சட்டமன்றத் தேர்தலில் இக்கிரிமினல்கள் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டதும் ''குஜராத் தேர்தல் கங்காணி'' என்ற அமைப்பு அரசுத் தலைவர் அப்துல் கலாம், பிரதமர், உள்துறை அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கடிதம் எழுதி, இவர்களைத் தேர்தலில் நிற்க அனுமதிக்கக் கூடாது என்று வலியுறுத்தியது. ஆனாலும், இந்த 'ஜனநாயக சிற்பிகள்' இக்கிரிமினல்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இன்று இக்கிரிமினல்கள் குஜராத் அரசாங்கத்தின் 'ஜனநாயக'த் தூண்களாக மாறிவிட்டனர்!

குஜராத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிற எம்.எல்.ஏ.க்களும் இக்கிரிமினல் குற்றவாளிகள் பற்றி வாய் திறக்கவில்லை இதன் மூலம், குஜராத்தில் தாங்கள் ஒரு சிறந்ததொரு ஜனநாயக அரசாங்கத்தைத் தரவேண்டும் என்பதைப் பற்றி எந்தக் கட்சியும் அக்கறை காட்டவில்லை. ''ஜனநாயகம் கேலிக் கூத்தாகிவிட்டது. அரசியல் கிரிமினல்மயமாகிவிட்டது'' என்று வெதும்புகிறார், ''குஜராத் தேர்தல் கங்காணி'' அமைப்பைச் சேர்ந்த பேராசிரியர் திரிலோசன் சாஸ்திரி. முதலாளித்துவ தாராளவாதிகளே இந்திய நாடாளுமன்ற – சட்டமன்ற ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையிழந்து விட்ட நிலையில், இக்கேடுகெட்ட ஜனநாயகத்தைக் கட்டிக்காத்து, தேர்தல் பாதையின் மூலம் இந்து வெறியர்களையும் கிரிமினல் அரசியல் ரவுடிகளையும் வீழ்த்திவிட முடியுமென இன்னமும் நம்பச் சொல்லி ஏய்த்து வருகின்றனர், போலி கம்யூனிஸ்டுகள்.

## தனியார்மய எதிர்ப்பு: காங்கிரசின் கயவாளித்தனம்

''இலாபம் தரும் அரசுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்பதை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்; உறுதியாக நின்று அதை முறியடிப்போம்!'' – இப்படியொரு தீர்மானத்தை காங்கிரசுக் கட்சி 2001 மார்ச்சில் பெங்களூரில் நடந்த மாநாட்டில் நிறைவேற்றியுள்ளது. பின்னர், 2002 –இல் நடந்த டெல்லி மாநாட்டிலும், கடந்த நவம்பரில் இராசஸ்தானில் நடந்த அகில இந்திய காங்கிரசுக் கமிட்டிக் கூட்டத்திலும் இத்தீர்மானத்தை ஆதரித்து உறுதிப்படுத்தியது.

கடந்த டிசம்பர் முதல் வாரத்தில் நாடாளுமன்ற மேலவையில் தனியார்மயமாக்கும் நடவடிக்கைகள் பற்றிய விவாதம் வந்தபோது, காங்கிரசின் நியமன உறுப்பினரும் சட்ட வல்லுநருமான நாரிமன், ''எந்தெந்த துறைகள் நாடாளுமன்றச் சட்டம் மூலம் நாட்டுடமையாக்கப்பட்டுள்ளனவோ, அவற்றை நாடாளுமன்றச் சட்ட ஒப்புதல் இல்லாமல் தனியார்மயமாக்கக் கூடாது; அது சட்ட விரோதமானது'' என்று எதிர்ப்புக் காட்டினார். அதைத் தொடர்ந்து, தனியார்மய அமைச்சரான அருண்ஷோரி, உரிய சட்டங்கள் – சட்டத்திருத்தங்கள் கொண்டுவந்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதலுக்குப் பின்னரே, தனியார்மயமாக்குவோம் என்று அரசின் முடிவை அறிவித்தார். ஆனால், நாடாளுமன்ற மேலவையில் பா.ஜ.க. அரசுக்கு பெரும்பான்மை கிடையாது. காங்கிரசு மற்றும் எதிர்க்கட்சிகளின் ஆதரவின்றி எந்தவொரு மசோதாவையும் நிறைவேற்ற முடியாது.

இந்நிலையில் கடந்த டிசம்பர் முதல்வார இறுதியில், இந்திய அரசு வங்கியான இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியை (IDBI) கூட்டுரிமை நிறுவனமாக (அதாவது தனியாரும் பங்கேற்கும் நிறுவனமாக) மாற்றுவதற்கான சட்ட மசோதா கொண்டு வரப்பட்டது. அப்போது காங்கிரசு எம்.பி.யான பிரணவ முகர்ஜி, ''இந்த மசோதாவை ஆதரிக்கமாட்டோம்; நாடாளுமன்ற மேலவையில் இம்மசோதா நிராகரிக்கப்பட்டால், கூட்டு நாடாளுமன்றக் கூட்டத்தை நடத்த வலியுறுத்துவோம்'' என்று கர்ஜித்தார்.


இவற்றையெல்லாம் பார்க்கும் ஒருவர் காங்கிரசுக் கட்சி, தனியார்மயத்தை உறுதியாக எதிர்த்து நிற்கிறது என்றே கருதுவார். ஆனால், காங்கிரசுக்காரர்கள் பித்தலாட்டப் பேர்வழிகள். இப்படிச் சவடால் அடித்த பிரணவ முகர்ஜி, ''மசோதாவை எதிர்த்து ஓட்டுப் போடுவதைப் பற்றி காங்கிரசு கட்சியின் அரசியல் விவகாரக் குழுதான் முடிவு செய்யும்'' என்று அடுத்த நிமிடமே ''பல்டி'' அடித்தார். மசோதா ஓட்டெடுப்புக்கு வந்தபோது



படிப்பகம்

www.padippakam.com






காங்கிரசு கயவாளிகள் பா.ஜ.க. அரசுக்கு மறைமுகமாக ஆதரவளித்தனர். நாடாளுமன்ற மேலவையின் காங்கிரசு உறுப்பினர்கள் அன்று திட்டமிட்டே கீழவைக் கூட்டத்துக்குச் சென்றுவிட்டனர். எஞ்சியவர்கள் ஓட்டெடுப்பு நேரத்தில் அவையிலிருந்து நழுவி விட்டனர். அவையில் இருந்தவர்களிடம் இம்மசோதா ஓட்டுக்கு விடப்பட்டு, குறுகிய பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று விட்டது.

இதேபோல, இந்திய அரசின் கட்டுப் பாட்டிலிருந்த செண்டூர் விடுதி, தனியாருக்கு விற்றதில் நடந்துள்ள சட்டவிரோத மோசடிகள் பற்றி மையப் புலனாய்வுத் துறை விசாரணை நடத்த வேண்டும் என்று இடதுசாரிக் கட்சிகளும் சிவசேனாவும் மேலவையில் கோரியபோது, காங்கிரசு பெருச்சாளிகள் இதை ஆதரிக்கவில்லை. அடுத்த கட்டமாக, கொழுத்த இலாபம் தரும் அரசுத்துறை எண்ணெய் நிறுவனங்களைத் தனியார் - அந்நிய நிறுவனங்களிடம் விற்றுவிட பா.ஜ.க. அரசு முடிவு செய்துள்ள நிலையில், அதையும் காங்கிரசுக் கயவாளிகள் எதிர்ப்பின்றி ஆதரிக்கவே செய்வார்கள் என்பது நிரூபணமாகிவிட்டது. இந்தியாவில் இயங்கிவந்த அந்நிய எண்ணெய் நிறுவனங்கள் 1974 முதல் 76 வரையிலான காலத்தில் நாட்டுடைமையாக்கப்பட்டு, ''பாரத் பெட்ரோலியம்'' ''இந்துஸ்தான் பெட்ரோலியம்'' எனும் இரு பெரும் அரசுத் துறை நிறுவனங்களாக இலாபத்துடன் இயங்கி வருகின்றன. இனி, அவற்றையும் தனியார் முதலாளிகளிடம் தாரைவாக்க பா.ஜ.க. அரசு தீர்மானித்து விட்டது. சவடால் அடித்துவந்த காங்கிரசு, தனியார்மயமாக்கலுக்கு ஒத்தூதிக் கொண்டிருக்கிறது.

## மின் கட்டண உயர்வு: போலி கம்யூனிஸ்டுகளின் பித்தலாட்டம்

போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் மே.வங்கத்தின் மின்சார நெறிமுறைக் கழகம், அண்மையில் வெளியிட்டுள்ள உத்திரவானது, அம்மாநிலத்தையே மின் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. மின் கட்டணத்தில் சாமானிய மக்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மானியத்தை முற்றாக ஒழித்து, எல்லா பயனீட்டாளர்களும் சமம்தான் என்று மின்சார நெறிமுறைக் கழகம் கடந்த டிசம்பர் 16–ஆம் தேதி அறிவித்துள்ளது. இதன்படி பயனீட்டாளர்கள் ஒரு யூனிட்டுக்கு ரூ 3.90 பைசா மின்கட்டணமாகச் செலுத்த வேண்டும் என்றும், வரும் பிப்ரவரி மாதத்திலிருந்து இது நடைமுறைக்கு வரும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக மே.வங்கத்தின் 14 லட்சம் மின் பயனீட்டாளர்கள் (ஏழை–நடுத்தர வர்க்கத்தினர்) இக்கட்டணச் சுமையால் கடுமையாகப் பாதிக்கப்படுவர்.

மின்சார நெறிமுறைக் கழகம் என்பது, அரசுத்துறை நிறுவனமான மாநில மின்சார வாரியங்களை நட்டக் கணக்கு காட்டி மூடிவிட்டு, அதை தனியார் நிறுவனங்களிடம் தாரைவார்த்து விட்டு, அவர்கள் கோரும் இலாப விகிதத்துக்கு ஏற்ப மின்கட்டணத்தைத் தீர்மானித்து தொகையை வசூலித்துக் கொடுக்க, உலக வங்கி கைக்கூலிகளான மத்திய ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ள அமைப்பாகும். இக்கழகத்தின் உத்தரவுப்படி, மானியங்கள் நிறுத்தப்பட்டு ஏற்கனவே ஆந்திரா, ஒரிசா, உ.பி, மகாராஷ்டிரா மாநிலங்களில் மின் கட்டண உயர்வு திணிக்கப்பட்டு, அடுத்த கட்டமாக இப்போது தமிழகத்திலும் மே.வங்கத்திலும் செயல்படுத்தப்படுகிறது.

கடந்த 2000–வது ஆண்டில் ஆந்திராவில் உலக வங்கி உத்தரவுப்படி மின் கட்டணம் உயர்த்தப்பட்டபோது, அதை எதிர்த்து போலி கம்யூனிஸ்டுகளும் போராட்டத்தில் பங்கேற்று, தமது கட்சி ஊழியர்களை துப்பாக்கிச் சூட்டுக்குப் பலிகொடுத்து போராட்டத்தின் முன்னணியில் நின்றனர். ஆந்திராவில் உலக வங்கி உத்தரவுப்படி அம்மாநில மின்சார நெறிமுறைக் கழகம் மின்கட்டண உயர்வைத் திணித்ததைப் போலவே, இப்போது அதே வழியில் மே.வங்க மாநில மின்சார நெறிமுறைக் கழகமும் கட்டண உயர்வைத் திணித்துள்ளது. இக்கட்டண உயர்வு அநீதியானது; மக்கள் விரோதமானது என்று ஆந்திராவில் போராட்டத்தில் இறங்கிய போலி கம்யூனிஸ்டுகள், தாங்கள் ஆளும் மே.வங்கத்தில் இக்கட்டண உயர்வை எதிர்த்து போராட்டத்தில் குதிக்கவில்லை.

மாறாக, ''இது துரதிருஷ்டமானது'' என்று புலம்புகிறார் சி.பி.எம். முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா. ''இந்த உத்தரவை எதிர்த்து கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்போம்; அவசியமானால் உச்சநீதிமன்றத்துத்துக்கும் செல்வோம்'' என்று சட்டவாத செக்குமாட்டுப் பாதையில் பீடுநடை போடுகிறார் அம்மாநில மின்துறை அமைச்சர். ஆளும் 'இடது முன்னணி' தலைவர்களோ பிரதமருக்கு கடிதம் எழுதி, உத்தரவை ரத்து செய்யுமாறு கெஞ்சுகின்றனர்.

மைய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள மின்சார நெறிமுறைக் கழகம் உலக வங்கி உத்தரவுகளைச் செயல்படுத்துமாறு மாநில அரசுகளை நிர்ப்பந்திக்கிறது என்றால், எங்கள் மாநிலத்தில் இதைச் செயல்படுத்தமாட்டோம் என்று போலிகம்யூனிஸ்டுகள் எதிர்த்து நிற்க வேண்டியதுதானே! அதைவிடுத்து முணுமுணுப்பு, சவடால், புலம்பல்களுடன் இக்கட்டண உயர்வை மக்கள் மீது திணிப்பது ஏன்? மைய அரசு திணிக்கும் மக்கள் விரோதக்


படிப்பகம்

www.padippakam.com



கொள்கைகளை எல்லாம் புலம்பிக் கொண்டே செயல்படுத்துவதுதான் தங்கள் வேலை என்றால், அதற்கு எந்தக் கழுதையும் ஆட்சியில் இருக்கலாமே! அப்புறம் எதற்காக புரட்சி பேசும் போலி கம்யூனிஸ்டுகள் பதவியில் இருக்க வேண்டும்? நாற்காலி தேய்க்கவா?

## குப்பையில் வீசியெறியப்படும் துப்புரவுத் தொழிலாளர்கள்

தனியார்மயத்தை தீவிரமாக்கிவரும் உலகவங்கி கைக்கூலி ஜெயா அரசு, சென்னை மாநகராட்சியின் பல்லாயிரக் கணக்கான துப்புரவுத் தொழிலாளர்களின் வாழ்வைப் பறித்து குப்பைக் கூடையில் வீசியெறியக் கிளம்பிவிட்டது. கடந்த டிசம்பரில் சென்னை மாநகராட்சியின் அ.தி.மு.க. கவுன்சிலர்கள் துப்புரவுப் பணிகளைத் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கும் தீர்மானத்தைத் தமது பெரும்பான்மை பலத்தைக் கொண்டு நிறைவேற்றியுள்ளனர். இதன்படி, பல்லாயிரக் கணக்கான மாநகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் வேறு பணிகளுக்கு மாற்றப்படுவார்கள்; அல்லது வேலையிழப்பார்கள்.

சென்னை மாநகராட்சியில் ஏறத்தாழ 7500 நிரந்தரத் தொழிலாளர்களும் ஏறத்தாழ 1700 தற்காலிகத் தொழிலாளர்களும் துப்புரவுப் பணியாளர்களாக உள்ளனர். 2000–வது ஆண்டில் சென்னை மாநகரின் 6,8,10–வது மண்டலங்களின் துப்புரவுப் பணி, ''ஓனிக்ஸ்'' என்ற தனியார் நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டது. அதன் விளைவாக, ஏறத்தாழ 2000 நிரந்தரத் தொழிலாளிகளும் 500 தற்காலிகத் தொழிலாளர்களும் தமது பணியிடங்களை விட்டு மற்ற மண்டலங்களுக்கு மாற்றப்பட்டனர். ஏனெனில் ''ஓனிக்ஸ்'' நிறுவனம் அற்பக் கூலிக்கு துப்புரவுப் பணிகளுக்கு ஆட்களை நியமித்துக் கொண்டதே தவிர, மாநகராட்சியின் துப்புரவுப் பணியாளர்களை 'அதிக' சம்பளம் கொடுத்து வேலைக்கு அமர்த்திக் கொள்ள மறுத்துவிட்டது.

இப்போது மேலும் 7 மண்டலங்களின் துப்புரவுப் பணி தனியாரிடம் கையளிக்கப்படுவதால், ஆகப் பெரும்பான்மையான மாநகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் வேலையிழப்பார்கள். இவர்களை வேறு பணிகளுக்கு மாற்றுவதாகக் கூறினாலும், பணிநிரந்தரம் இல்லை. வேலையும் எதிர்கால வாழ்வும் பறிக்கப்படுவதை எதிர்த்து துப்புரவுத் தொழிலாளர்கள் கடந்த டிசம்பர் முதல்வாரத்தில் ரிப்பன் மாளிகை முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். மாநகராட்சி ஆணையர் கலைவாணன், ''உங்கள் புகார்களையும் ஆலோசனைகளையும் தனியார்மய நடவடிக்கைக்கான கமிட்டியிடம் முறையிடுங்கள்'' என்று அலட்சியப்படுத்தினார். இக்கமிட்டியிடம் முறையிடுவது என்பது தனியார்மயத்தை ஏற்றுக் கொள்வதாகும் என்று மறுத்துவிட்ட தொழிற்சங்கங்கள், டிசம்பர் 13 அன்று துப்புரவுப் பணியாளர்களைத் திரட்டி கண்டனப் பேரணியை நடத்தின. ஆனாலும், உலக வங்கி கைக்கூலி ஆட்சியாளர்கள் எதையும் பரிசீலிக்க மறுத்து, தனியார்மயமாக்கும் நடவடிக்கையில் முனைப்பாக உள்ளனர்.

2000–வது ஆண்டில், அன்று காங்கிரசு கட்சி கவுன்சிலராக இருந்த கராத்தே தியாகராஜன், மாநகராட்சியின் மூன்று மண்டலங்களின் துப்புரவுப்பணிகள் தனியாரிடம் கையளிக்கப்பட்டபோது கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து, அவைக் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்ததோடு, அன்றைய தி.மு.க. அரசை ''தலித் விரோத அரசு'' என்று சாடினார். இன்று அவர் அ.தி.மு.கவில் சேர்ந்து துணைமேயரான பின்பு, தனியார்மயமாக்கலைத் தீவிரப்படுத்தி, துப்புரவுத் தொழிலாளர்களின் வயிறிலடிக்கவும் துணிந்துவிட்டார். ''நான் தனியார்மயமாக்கலை எதிர்க்கவில்லை; தனியார் நிறுவனத்திடம் குறைவான தொகைக்கு ஒப்பந்தம் போடப்பட்டதைத்தான் அன்று குற்றம் சாட்டி எதிர்ப்பு தெரிவித்தேன்'' என்று அவர் நாக்கைச் சுழற்றி விளக்கமளிக்கிறார்.

விவசாயிகள், நெசவாளர்கள், போக்குவரத்து தொழிலாளர்கள், சாலைப் பணியாளர்கள் என அடுத்துத் தாக்குதல் தொடுத்துவரும் பாசிச ஜெயா அரசு, இப்போது பல்லாயிரக்கணக்கான துப்புரவுத் தொழிலாளர்களின் எதிர்கால வாழ்வையும் பறிக்கக் கிளம்பிவிட்டது.

சென்னை மாநகராட்சி துப்புரவுப் பணிகளைத் தனியாரிடம் அளிப்பதைக் கண்டித்து நடந்த ஆர்ப்பாட்டம்.



உலக வங்கி கைக்கூலி ஜெயா அரசுக்கும் ஓட்டுக் கட்சி துரோகிகளுக்கும் எதிராக உழைக்கும் மக்கள் ஓரணியில் திரண்டு போராட வேண்டியதே இன்று அவசியமாக உள்ளது.

●○●

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் சென்ற மாதம் சென்னைக்கு வந்த பொழுது, பல்வேறு பள்ளி-கல்லூரி மாணவர்களை நேரடியாகவும், தொலைதூரக் கருத்தரங்க வசதியின் மூலமும் சந்தித்து உரையாடினார். அதிலொன்றுதான் இந்தப்படம்.

''மாணவர்களைச் சந்திப்பதிலும், அவர்களோடு பேசுவதிலும் அப்துல் கலாம், அரசு முறை சம்பிரதாயங்களை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. விழா மேடையில் இருந்த அமைச்சர்கள், கல்வியாளர்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு, அவரே மாணவர்களை மேடைக்கு அழைத்தார்; அவர்கள் கேட்ட கேள்விக்கெல்லாம் பதில் சொன்னார்; மாணவர்களுக்கு தனது மின்னணு முகவரியைக் கொடுத்தார்'' எனப் பத்திரிகைகள், மாணவர்களுக்குக் கலாம் கொடுத்த முக்கியத்துவத்தை எழுதித் தள்ளின.

மாணவர்களும், கலாமிடம் பேசியதை, அவரிடம் கேள்வி கேட்டதை அவர் பதில் சொன்ன விதத்தைச் சொல்லி மாய்ந்து போனார்கள். ''மாணவர்களின் ஓட்டு அப்துல் கலாமுக்கே'' என்ற முழக்கம் எழும்பாததுதான் பாக்கி.



இந்த உணர்ச்சிப் பசப்பல்களையெல்லாம் ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், எம்.ஜி.ஆர். பொதுக் கூட்ட மேடைகளில் ஏழைக்கிழவிகளைக் கட்டி பிடித்து 'போஸ்' கொடுத்ததற்கும், அப்துல்கலாம் மாணவர்களோடு ஒட்டிக் கொள்வதற்கும் இடையே வேறுபாடு எதுவும் கிடையாது,

''கோணல் புத்திக்காரர்களின் ஒப்புமை இது'' என ஆத்திரப்படுபவர்கள் மாணவர் சமுதாயத்தின் இன்றைய பிரச்சினைகளைப் பாருங்கள். இதோ, இந்த இரண்டு படங்களில் ஒன்று, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு தமிழக அரசு வழங்கி வந்த கல்விக் கடன் ரத்து செய்யப்பட்டதைக் கண்டித்து, அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் போராடுவது; மற்றொன்று, பீகாரில் உள்ள பி.ஆர்.அம்பேத்கர் பல் மருத்துவக் கல்லூரி என்ற தனியார் கல்லூரியின் கொள்ளையையும், அடாவடித்தனங்களையும் எதிர்த்து சுவேதா என்ற அக்கல்லூரி மாணவி தற்கொலை செய்து கொள்ள முயன்று உயிருக்குப் போராடுவது.



கல்வி தனியார்மயமாவதும், கல்வி கொடுக்க வேண்டிய பொறுப்பை அரசு கை கழுவி வருவதும்தான் இன்றைய மாணவர் சமுதாயம் எதிர் நோக்கும் அபாயகரமான பிரச்சினை. அரசு கல்லூரிகளைப் பல்கலைக்கழகத்துடன் இணைத்ததை எதிர்த்துப் போராடி ஓய்ந்திருக்கும் தமிழக மாணவர்களிடம், அப்துல் கலாம் அந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசவில்லை. ஏழை – நடுத்தர மாணவர்களின் உயர் கல்வி படிப்பிற்கு வேட்டு வைக்கும் இந்தப் பிரச்சினைகளைப் பற்றி அவர் பேசவும் மாட்டார். ஏனென்றால், எந்த இந்திய அரசு கல்வியில் தனியார் மயம் – தாராளமயத்தைப் புகுத்துகிறதோ, அந்த இந்திய அரசின் தலைவர் அவர்.

அப்படியிருக்கையில், அப்துல் கலாம் மாணவர்களிடம் ''கனவு காணுங்கள்; அதைச் செயலாக்குங்கள்; நீங்களும், இந்தியாவும் முன்னேறலாம்'' எனப் போதிக்கிறார். எங்கு போனாலும், குடுகுடுப்பைக்காரன் போல இதையே திரும்ப திரும்பச் சொல்லி மாணவர்களை மயக்கப் பார்க்கிறார். பறவையின் சிறகை ஒடித்துவிட்டு, அதைப் பறக்கச் சொல்லும் மோசடித்தனம் அல்லவா, இந்தப் போதனை?

''மாணவர்கள்தான் இந்தியாவின் எதிர்காலம்'' என அவர்கள் தலையில் ''ஐஸ்'' வைக்கும் அப்துல் கலாமின் மோசடி ஒரு புறம். உயர் கல்வி பெறும் உரிமைக்கு வேட்டு வைக்கும் தனியார்மயம் – தாராளமயத்தை எதிர்த்துப் போராடும் மாணவர்கள் மறுபுறம். இதில் நீங்கள் யார் பக்கம் என்பதை முடிவு செய்ய வேண்டிய தருணமிது!

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

PUTHIYA JANANAYAGAM
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER NO. 42648/85
Regn. No. TN/Chief PMG - 544/2002
www.padippakam.com



இந்து என்று சொல்லாதே! பார்ப்பான் பின்னே செல்லாதே!

# பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு

## 22 – 23 பிப்ரவரி, 2003 தஞ்சை – திருவள்ளுவர் திடல்

நாடெங்கிலுமிருந்து பத்திரிகையாளர்கள், வழக்குரைஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், நீதிபதிகள், அறிவுத்துறையினர் பங்கேற்கும் கருத்தரங்கம்

பார்ப்பன இந்துமதவெறிக்கும் சாதிவெறிக்கும் இலக்கான தலித், சிறுபான்மை மக்களின் நேருரைகள், ஓவியக்காட்சி, புகைப்படக் காட்சி, கலைநிகழ்ச்சிகள்

**மக்கள் கலை இலக்கியக் கழகம்**
**புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி**
**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி**
**விவசாயிகள் விடுதலை முன்னணி**
**தமிழ்நாடு**

படிப்பகம்